# ஆசார்ய வ்ருக்ஷம்

(ஸ்ரீரங்கம் ஸ்ரீமத் ஆண்டவன் ஆஸ்ரமம் கோவை -மாத மின் இதழ்)

குரோதி சித்திரை :: ஏப்ரல்- மே :: 2024

மலர்-5 இதழ்-4

## ஆஸ்ரம பெருமாள்



ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம: ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

# Srimathey Varahamahadesikaya nama:



**-குரோதி வருஷத்திய பலன் வெண்பா -**
**கோரக் குரோதிதனிற் கொள்ளைமிகுங் கள்வரினால்**
**பாரிற் சனங்கள் பயமடைவர் - கார் மிக்க**
**அற்ப மழை பெய்யு மஃகங் குறையுமே**
**சொற்பவினை வுண்டெனவே சொல்.**

## Significance of Tamil New Year

சூரியன் தன் பயணத்தை, கிழக்கில் ஆரம்பிக்கும் நாள் தான், தமிழ் புத்தாண்டாக கொண்டாடப்படுகிறது. குரோதி வருட தமிழ்ப் புத்தாண்டு பிறப்பு 14.04.2024
சித்திரை திங்கள் ஞாயிற்றுக்கிழமையன்று நடைபெறும். ஸ்ரீ சோபகிருது ஆண்டு பங்குனி மாதம் 31ம் நாள் சனிக்கிழமை இரவு மணி 8.10 க்கு ஸ்திர துலா லக்கினத்தில் சனி ஓரையில் முடிவடைந்த பிறகு, தமிழ் புத்தாண்டான குரோதி பிறக்கிறது. இந்த ஆண்டு புத்தாண்டின் சிறப்பு என்னவென்றால், குருவும் சூரியனுடன் அமர்ந்துள்ளார் என்பதுதான். ஏனென்றால், இது மிகப்பெரிய அரிய கோச்சார அமைப்புடைய சேர்க்கை என்பது அரிதான நிகழ்வு, இது 12 ஆண்டுக்கு ஒரு முறையே நடைபெறும் என்பதால், இந்த குரோதி புத்தாண்டு பலருக்கும் நன்மையாகவே மலரும்.
இந்த இணைவு, சூரியனால் ஏற்படும் பல தோஷங்களை நீக்கிவிடும். சூரியன் உச்சமாகும் நிலையில் அவருடன் குருபகவான் உள்ளதால் ஆரோக்கியம் மேம்படும். அறிவு கூர்மையாகும். குழந்தை பேறு சிறக்கும். நிர்வாகத்திறன் கூடும். “அறுபது வருட வெண்பா” என்று தமிழ் ஆண்டுகள் தொடர்பான வெண்பா இடைக்காடர் என்ற சித்தரால் பாடப்பட்டது. ஸ்ரீ குரோதி தமிழ் புத்தாண்டு 60 ஆண்டுகளில் 38வது ஆண்டு ஆகும். இது கோரமான வருடமானதால், கொள்ளை, களவு பகை பெருகும். மழை குறைவாகப் பெய்யும் உணவுப் பொருட்களின் விலை உயரும். என்ன முன்னுக்கு பின் முரணாக இருக்கிறது என்று பயப்பட வேண்டாம்.

***குரோதி வருட தமிழ் புத்தாண்டு ராசிபலன்:***
***பொதுவாகவே, இது மங்களகரமான ஆண்டாக இருப்பினும் சில ராசிக்காரர்களுக்கு கூடுதல் பலன்களையும் அதிர்ஷ்டத்தையும் அள்ளிக் கொடுக்கும் என கணித்துள்ளனர் ஜோதிட வல்லுநர்கள். புத்தாண்டு மிகவும் சுப பலன்களையும் அதிர்ஷ்டத்தையும் அள்ளிக் கொடுக்கப் போகிறது.***

# நம் வாசர்களுக்கு
# குரோதி வருடம்
# நல்லதையே வழங்கட்டும் என்று நம் ஆண்டவனை பிரார்த்தித்கொள்கிறோம்

# குருபரம்பரை



*www.aradhanam.org* வெப் சைட்டில் ஆசார்ய வ்ருக்ஷம் *2020,2021,2022, 2023* இதழ்கள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. படித்து மகிழவும்.

**ஆசார்யர்கள் ஞானிகள்.**

**அவர்கள் கடவுளுக்கு மிகவும் பிரியமானவர்கள்.**
**ஆசார்யர்கள் மனதின் இருளை போக்கு பவர்கள்.**



*Ramanujar*



*Nadadhoor Ammal*

## குரு-ஆசார்யன் விளக்கம்

गुशब्दस्तु अन्धकारः स्यात् रुशब्दःतन्निरोधकः ।
अन्धकार - निरोधित्वात् गुरुरित्यभिधीयते ॥

என்றபடி அறியாமையாகிற இருளைப் போக்குகிறவர் குரு எனப்படுவர்.

आचिनोति हि शास्त्रार्थान् आचारे स्थापयत्यपि ।
स्वयमाचरते यस्मात् तस्मादाचार्य उच्यते ॥

என்பதற்கிணங்க வேதாதி சாஸ்த்ரங்களைத் தான் முதலில் கசடறக் கற்று, அதன்படி ஒழுகி, பிறரையும் அறிவுறுத்தித் திருத்துபவர் ஆசார்யன்.

******************************************

## திருமண் காப்பு என்னும் சொல்லே திருமண் இடுதல்

**நமக்கு ரக்ஷை - திருமண் திருமாலின் பக்தியையும் ஸ்ரீ சூர்ணம் திருமகளின் பக்தியையும் குறிக்கும்**

**பரஸ்ய பும்ஸ பதயந்நிவே சாந்**
**ப்ரயுஞ்ஜதே பாவித பஞ்ச ராத் ரா :**
**அக ப்ரதீபாந் அபதிச்ய புண்ட்ராந்**
**அங்கேஷ ரங்கேசய பாதுகே த்வாம்**

*******************************************************************************

## முநித்ரயஸம்ப்ரதாயப்ராரம்பம் / உதயம்/ விருட்க்ஷம்

**திருக்குடந்தை தேஸிகன் திருவடிகளில்**
**ஆஸ்ரயித்த மூன்றுயதிகள்.**

**முதலாவதாக ஸ்ரீமந்நாதமுனிகளின் அம்சமான ஸ்ரீநிவாஸ மஹாதேஸிகன்**

**இரண்டாவதாக ஸ்ரீமத் யாமுனமுனியின் அம்சமாக ஸ்ரீரங்கநாத மஹா தேஸிகன் .**

**மூன்றாவதாக ஸ்ரீபாஷ்யகாரர் அம்ஸமாக வேதாந்தராமாநுஜ மஹா தேஸிகன் .**

# ஆசாரியர்கள் உதவி

குருடனுக்குக் குருடன்வழிகாட்ட இயலாது. வழிகாட்டுபவன் கண் தெரிந்தவனாகவும் வழி தெரிந்தவனாகவும் இருக்கவேண்டும். அப்படியே பகவத் விஷயத்திலும், சாஸ்திர ஞானமும் அநுஷ்டானமும் உடையவரே பிறருக்கு வழிகாட்ட இயலும். இப்படிப் பட்டவர்களை ஆசாரியர்கள் என்பர். சாஸ்திர ஞானத்தைத் தாமும் ஆசரித்துக் காட்டி, சிஷ்யரையும் ஆசரிப்பிக்க வல்லவர்கட்கே ஆசாரியர் என்பது பெயராம். இவர்கட்குக் குரு, தேசிகர் முதலிய பல பெயர்கள் வழங்கும். ஸ்ரீமத் நாராயணனே யாவர்க்கும் முதல்வனான ஆசாரியன் ஆவன். வேதத்தைப் பிரம்மாவுக்கு அருளியமையும், கீதையைச் சீடனான அருச்சுனனுக்கு அருளியமையும் பகவானே பரமாசாரியன் என்பதை உணர்த்தும்.



| குரோதி சித்திரை | பஞ்சாங்க ஸங்கிரஹம் |
|---|---|

| அமாவாசை | சர்வ ஏகாதசி | த்வாதசி | மாத பிறப்பு தர்ப்பணம் |
|---|---|---|---|
| 7.05.2024 | 19.04.2024<br>4.05.2024 | 20.04.2024<br>5.05.2024 | 13.04.2024<br>14.05.2024 |

| தமிழ் தேதி சித்திரை | ஆங்கிலச் தேதி ஏப்ரல்/ மே | வைபவம் |
|---|---|---|
| 4 | 17.04.2024 | ஶ்ரீ ராமநவமி |
| 10 | 23.04.2024 | நடாதூர் அம்மாள், மதுர கவி திருநக்ஷத்ர வைபவம்<br>சித்ரா பௌர்ணமி |
| 15 | 28.04.2024 | ஶ்ரீ வராஹ ஜெயந்தி |
| 18 | 1.05.2024 | குரு பெயர்ச்சி |
| 22 | 5.05.2024 | ஶ்ரீ மத்ஸ்ய ஜெயந்தி |
| 27 | 10.05.2024 | ஶ்ரீ அக்ஷய த்ருத்யை ,<br>ஶ்ரீ பலராம ஜெயந்தி |
| 29 | 12.05.2024 | ஶ்ரீ ராமானுஜ ஜெயந்தி அப்புள்ளார் திருநக்ஷத்ர வைபவம் |

# ஆசார்ய வ்ருக்ஷம்

## குரோதி சித்திரை 2024 -தமிழ்- பொருளடக்கம்


| எண் | தலைப்பு | பக்கம் எண் |
|---|---|---|
| 1 | ஆழ்வார்கள் | 10 |
| 2 | நமது ஆஸ்ரம ஆசார்யர்கள் | 11 |
| 3 | ஆசார்யர்களின் அனுக்கிரஹம் | 13 |
| 4 | ஆசார்யகளின் தனியன்கள் | 14 |
| 5 | காலை பாதுகா திருவாராதனம் | 15 |
| 6 | நித்ய பாராயண கோஷ்டி | 16 |
| 7 | யதிகள் முன்னினையில் நடந்து கொள்ளும் விதம் | 17 |
| 8 | சிஷ்யனின் கடமை | 18 |
| 9 | தேசிக தர்ஷன புதிர் 11- மாலதி பாலாஜி | 19 |
| 10 | ஆசார்யனின் அருள்மொழிகள் | 20 |
| 11 | பகவானுக்கு அபராதம் செய்யாது இருத்தல் | 22 |
| 12 | அஷ்டபுஜாஷ்டகர திவ்ய தேசம் | 23 |
| 13 | நல்ல பதில் கிடைத்தது-8 - உ.வே.வேணுகோபாலன் ஸ்வாமி | 28 |
| 14 | திவ்யப்ரபந்தத்தில் கேள்வி பதில்- கோதை லக்ஷ்மி ஸ்ரீநிவாஸன் | 31 |
| 15 | மத ஸார ஸங்க்ரஹம் | 33 |
| 16 | திவ்யப்ரபந்தத்தில் கேள்வி பதில்— சரியான பதில் | 35 |
| 17 | சேவிக்க தகாத சமயங்கள் | 38 |
| 18 | ஹேமா ராகவனின் இந்த மாத கவிதை | 39 |
| 19 | பயனற்ற தவம் | 40 |
| 20 | உடையவரே உறுதுணை | 42 |
| 21 | புத்தகம் மதிப்பாய்வுரை | 44 |
| 22 | சூழ்விசும் பணி முகில் | 46 |
| 23 | ஸ்ரீ வராஹ சரம ஸ்லோகம் | 48 |
| 24 | கோவில்களில் இத்தனை மண்டபங்களா? | 49 |
| 25 | புதிர்-இன்பத்தில் இறைஞ்சுதலில் -மதுரகவி | 50 |
| 26 | கோசாலை விஸ்தரிப்பு -ஆமூர் | 52 |
| 27 | ஸ்ரீமத் ஆண்டவன் காலேஜ், ஸ்ரீரங்கம் | 54 |


**சேதனுக்கு உள்ள கருவிகள் மூன்று.**


**அவை மனம்,வாக்கு , உடல் என்பன.**

# 12 ஆழ்வார்கள்



## ஆழ்வார்கள் திருவடிகளே சரணம்

# நமது ஆஸ்ரம ஆசார்யர்கள்



# ஸ்ரீமுஷ்ணம் சின்னாண்டவன்
# 12வது பீடாதிபதி




## வெற்றியின் மூன்று வழிகள்.

**1) மற்றவர்களை விட அதிகமாக தெரிந்து கொள்ளுங்கள்.**
**2) மற்றவர்களை விட அதிகமாக பணியாற்றுங்கள்.**
**3) மற்றவர்களை விட குறைவாகவே எதிர்பாருங்கள்.**

**சில மனிதர்கள் கஷ்டத்தில் இருக்கும் போது ஜோசிய காரர்களை மாற்றுகிறார்கள், பிறகு இருக்கும் வீட்டை மாற்றுகிறார்கள், கடைசியாக கும்பிடும் தெய்வத்தை மாற்றுகிறார்கள். கடைசி வரை தன்னை அவர்கள் மாற்றி கொள்வதில்லை. எவர் ஒருவர் கஷ்டத்தில் இருக்கும்போது தன்னை மாற்றிக் கொள்கிறாரோ அவரே வெற்றி பெறுவார்.**

# நமது ஆசார்யர்களின் அனுக்ரஹம்



<u>ஒவ்வொரு ஸ்ரீவைஷ்ணவரும், கட்டாயமாகச் செய்யவேண்டிய கடமை</u>

**ஒரு நல்ல அதிகாரியான ஸ்ரீவைஷ்ணவ வித்வானை ப்ரார்த்தித்து அவர்மூலம் நம் ஸ்ரீவைஷ்ணவ நெறிகளை உணர்ந்து, சாஸ்த்ரம் விதித்தபடி அனுஷ்டாங்கங்களைக் கடைப்பிடித்து ஒழுகி (இது க்ரந்த காலக்ஷேபம்) அதனடியாக, யதிராஜர் ஸ்ரீமத் ராமானுஜர் சாதித்த ஸ்ரீபாஷ்யம் மற்றும் கீதா பாஷ்யம், திருக்குருகைப்பிரான் பிள்ளான் அருளிய பகவத் விஷயம், ஸ்வாமி ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன் அருளிய ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய சாரம் ஆகிய நான்கையும் நன்கு கற்றுத் தேர்தலாகிய க்ரந்த சதுஷ்டய காலக்ஷேபம் அதிகரித்தல் என்பதை மேற்கொள்ளவேண்டும்.**
**பூர்வாசார்ய க்ரந்த காலக்ஷேபம் என்பது கதாகாலக்ஷேபம் உபந்யாஸம் ஆகியவற்றைக் கேட்பதிலிருந்து வேறுபட்டது. இவையும் அதுவும் ஒன்றல்ல.**



## <u>*திருக்குடந்தை ஸ்ரீமத் ஆண்டவன்*</u>
## <u>*பங்குனி –புஷ்யம்*</u>

**ஸ்ரீமத் வேதா3ந்த ராமானுஜமுநி கருணாலப்3த4 வேதா3ந்தயுக்3மம்**
**ஸ்ரீமத் ஸ்ரீவாஸ யோகீ3ஸ்வர கு3ருபத3யோரர்ப்பித ஸ்வாத்ம பா4ரம்|**
**ஸ்ரீமத் ஸ்ரீரங்க3நாத2ஹ்வய முநிக்ருபயா ப்ராப்த மோக்ஷாஶ்ரமம்தம்**
**ஸ்ரீமத் வேதா3ந்தராமாநுஜ முநிமபரம் ஸம்ஶ்ரயே தேஶிகேந்த்ரம் ॥**

---

## <u>*மைசூர் ஸ்ரீமத் ஆண்டவன்*</u>
## <u>*ஆவணி –உத்திரம்.*</u>

**ஸ்ரீமத் ஸ்ரீவாஸ யோகீ3ஸ்வர முநிகருணாலப்த வேதா3ந்தயுக்3மம்**
**ஸ்ரீமத் வேதா3ந்த ராமானுஜ கு3ருபத3யோரர்ப்பித ஸ்வாத்மபா4ரம் |.**
**ஸ்ரீமத் ஸ்ருத்யந்த ராமாநுஜயதிந்ருபதே: ப்ராப்தமோக்ஷாஶ்ரமம் தம்**
**ஸ்ரீமத் ஸ்ரீவாஸ ராமாநுஜமுநிமபரம் ஸம்ஶ்ரயே ஜ்ஞாநவார்த்3தி4ம் ॥**



## <u>*ஸ்ரீ முஷ்ணம் ஸ்ரீமத் ஆண்டவன்*</u>
## <u>*வைகாசி –திருவாதிரை*</u>

**வேதா3ந்த லக்ஷ்மண முநீந்த்3ர க்ருபாத்தபோத4ம்**
**தத்பாத யுக்3ம ஸரஸீருஹ ப்4ருங்க3ராஜம்।**
**த்ரையந்த யுக்3ம க்ருதபூ4ரி பரிஶ்ரமம் தம்**
**ஸ்ரீரங்க3 லக்ஷ்மணமுநிம் ஶரணம் ப்ரபத்3யே ॥.**





## <u>*ஸ்ரீ முஷ்ணம் ஸ்ரீமத் சின்னாண்டவன்*</u>
## <u>*ஸ்ரீ வராஹ மஹாதேஶிகன்*</u>

**ஸ்ரீமத் வேதா3ந்த ராமானுஜ யதிக்ருபயா ரங்கி3ணி ந்யஸ்தபா4ரம்**
**தத்ஸம்ப்ராப்தாக3மாந்த த்3விதயமனுக3ணம் ஶிஷ்டதாபூர்ணமக்3ர்யம்।**
**ஶ்ரேஷ்ட ஸ்ரீ ரங்க3ராமானுஜமுனிகருணாலப்3த4 மோக்ஷாஶ்ரமம் தம்**
**ஸத்த்வஸ்த2ம் ஸ்ரீவராஹம் யதிவரமநக4ம் தேஶிக3ம் ஸம்ஶ்ரயாமி ॥**

**<u>இந்து சமயம் மற்றும் சமூகத்தில் ஆசாரியர், சமயச் சாத்திரங்கள், தத்துவங்கள், சடங்குகள் மற்றும் மரபுகள் தொடர்பான கருத்துகளுக்கு விளக்கம் அளிப்பவரும் மற்றும் ஆன்மீக வழிகாட்டியும் ஆவார். மேலும் இந்து சமயத்தின் ஒரு புதிய பிரிவின் நிறுவனரையும், தலைவரையும் ஆசாரியர் என்று அழைப்பர். வேத, வேதாந்த சாத்திரங்களை நன்கு கற்றவர்களை ஆசாரியர் எனும் அடைமொழியுடன் மரியாதையாகப் போற்றப்படுகிறர்கள்.</u>**

# காலை ஶ்ரீ பாதுகா ஆராதனம்



**திர்த்த கோஷ்டி**



# ஆசார்யன் வழி நடத்தும் நித்ய பாராயண கோஷ்டி



தினசரி காலையில் ஸ்ரீமத் ஆண்டவன் ஸ்ரீவராஹ மஹாதேசிகன் கத்ய த்ரயம், பாதுகா சஹஸ்ரத்திலிருந்து சில பத்ததிகள், ஸ்ரீசுதர்ஷனாஷ்டகம், ஸ்ரீ ஷோடசாயுத ஸ்தோத்ரம் ஆகியவற்றைப் பாராயணம் பண்ணும்போது அந்த கோஷ்டியில் அந்வயித்து ஸ்ரீமத் ஆண்டவன் வழிகாட்டல்கள், அறிவுரைகள், ஆசீர்வாதங்கள் பெற்று அவரது திருக்கரங்களால் மந்த்ராக்ஷதையும் பெறும் பாக்கியம் எல்லாரும் பெறவேண்டும் .

---

ஆசார்யனைக் காட்டிலும் சீரிய தெய்வம் இல்லை

பகவானும் ஆசார்யனாக இருந்தே பெருமை அடைகிறான்

நம்மை காப்பவனை நினைப்பது நம் கடமை

## ஆண்டவனின் அனுகிரஹ பாஷணம்



வெவ்வேறு தேதிகளில் நமது ஆசார்யனின் அனுகிரஹ பாஷணம் கேட்க, தயவு செய்து பின்வரும் வழிகள் மூலம் அறியவும்.:

a. நமது வலை தளம்: andavan.org

b. நமது முகநூல் பக்கம்: facebook.com/andavanashramam

c. instagram.com/andavan.ashramam & twitter.com/andavanashramam

# யதிகள் முன்னிலையில் நடந்துகொள்ளும் விதம்

1. பகவத் ஸந்நிதியை அணுகும்போது எவ்வளவு பக்தி விநயம் முதலியவை தேவையோ அவ்வளவும் நாம் யதிகளை அணுகும் போதும் தேவை.

2. சொக்காய் தலைப்பாகை தரிப்பவர்கள் அவைகளை நீக்கிவிட்டு சுத்தமாக ஸ்நாநம் செய்து முடிந்தால் பன்னிரு நாமங்களையோ அல்லது நெற்றியில் மாத்திரமோ பளிச்சென்று திருமண் ஸ்ரீ சூர்ணங்களை தரித்துக்கொண்டு செல்ல வேண்டும்.

3.உத்தரீயத்தை இடுப்பில் கட்டிக்கொண்டு செல்ல வேண்டும். கிருஹஸ்தர்கள் தட்டாடை கட்டிக்கொள்ளாமல் கச்சம் வைத்து வேஷ்டி உடுத்திக்கொண்டு செல்ல வேண்டும்.

4. செல்லும்போது வெறுங்கையுடன் செல்லக்கூடாது. ஏதாவது பழங்களை கையில் எடுத்துச்சென்று தட்டில் பாத காணிக்கையுடன் சமர்ப்பிக்கவேண்டும்.

5. வடகலை ஸ்ரீ வைஷ்ணர்கள் யதிகளை ஸேவிக்கும்போது அவர்கள் போதும் என்று சொல்லும் வரை ஸேவித்துக்கொண்டே இருக்கவேண்டும்.

6.யதிகளிடம் தேவர் தேவரீர் என்ற பதங்களுக்கு பதிலாக 'ஸ்வாமி' என்றும் - ஸ்வாமி ஸாதிக்கும்படி இருந்தது என்றும் ஸ்வாமி விஞ்ஞாபித்தது என்பன போன்ற வார்த்தைகளையே உபயோகிக்கவேண்டும்.

7. எந்த விஷயத்தையும் தாழ்ந்த குரலில் பயபக்தியுடன் ஸ்ம்ப்ரதாய ச்ரத்தாளு என்று தொனிக்கும் வகையில் விஞ்ஞாபனம் செய்ய வேண்டும்.

8. யதிகளுக்கு மிக சமீபத்தில் நிற்காமல் சற்று தூரத்தில் அடக்கமாக நின்று அவர்கள் கேட்கும் விஷயங்களுக்கு விநயமாக பதில் சொல்லவேண்டும்.

9. எந்த வார்த்தையிலும் நான் என்று வரக்கூடாது அடியேன் என்று உபயோகிக்க வேண்டும்.

10. யதிகளிடம் ஏதாவது சமீபமாக போய் சொல்லவேண்டியிருந்தால் பேசும்போது மூச்சுக்காற்று எச்சில் முதலியவை அவர்கள் மீது படாமலிருக்கும்படி விரல்களை சேர்த்து வாய்க்கு நேரில் வைத்துக்கொண்டு பேசவேண்டும்.

11. யதிகள் தனக்கு பின்புறம் வருவதாக தெரிந்தால் சற்று ஒதுங்கி அவர்களுக்கு வழிவிட்டு அவர்கள் பின்னே செல்ல வேண்டும்.

# குருபக்தி உண்டாக பிரார்த்தனை

ஏதே மஹ்யமபோடமந்மத சரோந்மாதாய நாதாதய: த்ரய்யந்த
பிரதிநந்தநீய விவிதோதந்தா ஸ்வதந்தா மிஹ சரத்தாதவ்ய
சரண்ய தம்பதிதயா திவ்யா பகா வ்யாபகா:
ஸ்பர்தாவிப்லவ விப்ரலம்ப பதவீவைதேசிகா தேசிகா :

# சிஷ்யனின் கடமை

ஆசார்ய லக்ஷணத்தை விளக்கியுள்ளது போல் சிஷ்யனுடைய கடமைகள் யாவை என்பதையும் ஸ்வாமி ஸ்ரீதேசிகன் ஸ்ரீமத் ரஹஸ்ய த்ரயஸாரத்தில் சிஷ்யக்ருத்யாதிகாரத்தில் விளக்கியிருக்கிறார்.

உதாரணமாக, புத்திமானான சிஷ்யன் தன் ஆசாரியனுடைய பெருமையைப் பிரபலப்படுத்துவதுடன், அவரிடமிருந்து அறிந்த (ரகசிய) மந்த்ரங்களையும் மந்த்ரார்த்தங்களையும் முயற்சி செய்தாவது மறைத்து வைத்துக் கொள்ளவேண்டும். இதற்கு எதிரிடையாகச் செய்தால், பகவதநுபவம் என்னும் செல்வமும் ஸ்வநிஷ்டை என்னும் ஆயுளும் குலைந்துபோம் என்று கூறும் சேஷஸம்ஹிதையிலுள்ள சுலோகத்தைப் பிரமாணமாகக் காட்டியுள்ளார்

இப்படிப் பலவிதமான பிரமாணங்களுடன் சிஷ்யனுடைய கடமையை விளக்கும் இந்த அதிகாரத்தின் ஸாரத்தை அதிகார ஸங்கிரகம் 38-வது பாசுரம் நன்கு விளக்குகிறது:—

''ஏற்றி மனத்தெழில் ஞானவிளக்கை இருளனைத்தும்-
மாற்றினவர்க்கு, ஒருகைம்மாறு மாயனுங் காணகில்லான்
போற்றி யுகப்பதும் புந்தியிற் கொள்வதும், பொங்குபுகழ்-
சாற்றி வளர்ப்பதும் சற்றல்லவோ முன்னம் பெற்றதற்கே''

—அதிகார சங்கிரகம் 38

ஆசார்யன் சிஷ்யர்களுக்குத் தத்துவம், உபாயம், புருஷார்த்தம் ஆகிய இவற்றை உபதேசித்து ஜ்ஞானமாகிய தீபத்தை ஏற்றி அஜ்ஞானத்தை ஒழித்து விடுகின்றான். இத்தகைய ஆசார்யன் விஷயத்தில் செய்யக் கடவ பிரதியுபகாரத்தைக் காண்பதற்கு ஸர்வேசுவரனாலும் முடியாது.

# தேசிக தர்சனம் -புதிர்-11 சித்திரை 2024

## வடிவமைத்தவர் -மாலதி பாலாஜி

**கீழ் கண்ட தடயங்களில், நீங்கள் கண்டு பிடிக்க வேண்டியது:-**

**எந்த தேசிக ஸ்தோத்திரம், அந்த ஸ்தோத்திரத்தில் எந்த ஸ்லோகம்**

# DESIKA DARSHANAM

**PUZZLE** - 11

**Find the stotram and the shloka from the clues given.**

| | |
|---|---|
| 1. Sesha<br>Oushadagiri<br>Garuda | 2. - Rakshanavratee<br>VibheeshaNa<br>RaavaNa |
| 3. Vanamaala<br>Tulasee<br>Kaustubha | 4. VamshanAlA<br>MayoorapinchamAlA<br>HarineelashilA |
| 5. Kuchela<br>Dayaalu<br>dhAnA | 6. upaveeta<br>oordhvapuNDra<br>shikha |

narayani

**உங்கள் விடைகளை ranga2706@gmail.com க்கு அனுப்பவும்.**
**கடைசி தேதி: 17.04.2024 …… 6 விடைகளும் சரியாக இருந்தால் ,**
**தங்களுக்கு புத்தகம் பரிசாக அனுப்பபடும்.**
**நல் வாழ்த்துக்கள்**

ஸ்ரீ

ஸ்ரீமதே வேதாந்த ராமாநுஜ மஹாதேசிகாய நம :

# ஸ்ரீமத் ஆண்டவன் அருள்மொழி



"பொன்னானாய் பொழிலேழுங்காவல் பூண்ட
புகழானாயிகழ்வாய தொண்டனேன் நான்
என்னானாய் என்னானாய் என்ன லல்லால்
என்னறிவனேழையேன் உலக மேத்தும்
தென்னானாய் வடவானாய் குடபாலானாய்
குண பால மதயானாயிமை யோர்க்கென்றும்
முன்னானாய் பின்னானார் வணங்குந் சோதி
திருமூழிக் களத்தானாய் முதலானாயே"

பதவுரை : உலகம் ஏத்தும்:- உலகத்தில் வாழ்கின்ற மனிதர்களால் துதிக்கப்படும், தென் ஆனாய்:- தென்திசையில் இருக்கிற திருமாலிருஞ்சோலை மலையிலே நின்று அருள்புரிபவனே, வட ஆனாய்:- வடதிசையில் இருக்கின்ற வடவேங்கடத்தில் நின்று அருள் புரிபவனே, குடபால் ஆனாய் :- மேற்கு திசையில் இருக்கிற கோயிலிலே கண்வளர்ந்து நின்று அருள்புரிபவனே, குணபால மதயானாய்:- கீழ்திசையில் திருக்கண்ணபுரம் என்ற திவ்ய தேரத்தில் மதயானைப்போல செருக்குத் தோன்றி அருள்புரிபவனே. இமையோர்க்கும் என்றும் :- அனந்த கருட விஷ்வக் ஸேனாதிகளுக்கு எக்காலத்திலும் முன் ஆனாய் :- கண்ணால் கண்டுகளித்து அனுபவிக்கும்படி வீற்றிருப்பவனே, பின் ஆனார் :- உம்முடைய திவ்ய அவதாரத்திற்குப் பிற் பட்டவர்கள், வணங்கும் சோதி :- வணங்கத்தக்க தேஜோமய மான ரூபத்தில் வீற்றிருப்பவனே.

திருமூழிக்களத்து ஆனாய், திருமூழிக்களம் என்ற திவ்ய தேசத்தில் வீற்றிருப்பவனே முதல் ஆனாய் - எல்லா உலகிற்கும் காரணமாயிருப்பவனே பொன்னானாய் :- பொன் போல் எல்லா வகையாலும் உதவி செய்பவனே பொழிலேழும் :- ஏழு உலகங்களையும் காவல் பூண்டு கொண்டிருக்கிற புகழ் ஆனாய்:- காத்தல் என்ற குணத்தால் வந்த புகழை வுடைய எம்பெருமானே, இகழ்வாய:- இகழ்வையே உருவமாகக் கொண்ட, தொண்டனேன் நான்:- அடிமை பொருந்தியவனான நான், என் ஆனாய்:- என்னுடைய யானையே என்னுடைய யானையே, என்னல் அல்லால்:- என்று சொல்வது அல்லது ஏழையேன்:- உன்திறத்தில் அலைபாயும் விருப்பங்கொண்ட நான் என் அறிவன்: உன்னுடைய பண்புகளிலும் விளையாட்டுகளிலும் எதனை அறிவேன்.

அவதாரிகை:- அடியவர்கள் இருந்த இடத்திலே சென்று திருமுகம் தந்து அருள் பாளிப்பவனாய். நல்லவன் கெட்டவன் என்று நினையாமல் திருமுகம் தந்து காட்சித்தருபவனாய் எம்பெருமான் இருக்கவும். அந்த எம்பெருமான் முற்றிலும் நமக்கு திருமுகம் காட்சி அளிக்காதது ஏன் என வருந்தினார் ஆழ்வார். கீழ் பாசுரங்களில் மந்திரத்தை மந்திரத்தால் மறவாது என்றும் வாழுதியேல் வாழலாம் என்று கூறினோம். ஆகையால் மோக்ஷம் (வீடு) அடைவதற்கு திருமந்த்ரம் ஓர் கருவி (காரணம்) எம்பெருமான் அல்லன் என நினைந்திருக்கிறோம் என நினைத்து எம்பெருமான் திருமுகம் காட்டாது ஒழிந்தானோ என்று ஐயப்பட்டார் இப்பாட்டில். அந்த ஐயத்தை (மனக்லேசத்தைப் ) போக்குகிறார். மூலமந்த்ரமான திருமந்த்ரம் நமக்கும் எம்பெருமானுக்கும் இடையே உள்ள ஸம்பந்தத்தை வெளிப்படுத்துகிறது. இம்மந்த்ரத்தைக் கருவியாகக் கொண்டு இங்கே பேரின்பமான மோக்ஷத்தைப் பெறலாம் என்றும் எங்கும் ஆன்மா உள்ளவரையில் பேரின்பத்தைப் பெற்று விடலாம் என்றும் இதுவே நன்றாக பொழுது போக்கும் வழி என்று இப்பாட்டின் முக்யமான கருத்து. உன்னை (எம்பெருமானை) ஒழிய (விட்டு) மோக்ஷத்திற்கு வேறு மார்க்கம் உண்டு என்று நினைத்தவன் அல்லன். பேறு உன்னை ஒழிய வேறு என்று அறியிலன் என்றும் ஆறும் உன்னை (உம்மை) ஒழிய என்று அறிவேன் நான் என்ன அறிவேன் என்று கூறுகிறார் ஆழ்வார். இப்பாசுரத்தில் 'மந்தரத்தால்' என்கையால் மோக்ஷத்தை அடைய வழி உண்டு என்றும் ''மறவாது வாழுதியேல்". என் கையால் நாம் செய்ய வேண்டிய கடமை இது என்றும் வாழலாம் என்கையால் ஒருபயனும் தோன்றும் படியைக் காண்பித்தார் ஆழ்வார். இவ்வழிக் கடமையும் பயனும் இவர் நோற்ற நோன்பு: "நோற்ற நோன்பிலேன் நுண்ணறிவிலேன்" என்பதை எம்பெருமானை அடைய கை முதல் இன்மையைக் கூறி" அதிலும் இனி உன்னைவிட்டு ஒன்று மாற்ற கிற்கிலேன் என்று சுவையில் குறைவந்து இருக்கிற முறையையும் அருளிச் செய்தார் ஆழ்வார் அல்லரோ ஆகையால் தம் பக்கல் கை முதல் இன்மையினையும் எம்பெருமான் பக்கல் அவை நிறைவாக உள்ளமையையும் தெரிவிப்பதே இப்பாட்டின் நோக்கமாகும்.

*************************

# பகவான் தமக்கு அபசாரம் செய்யப்பட்டதாகக் கருதும் மானிடச் செய்கைகள்

1. துணியினால் உடம்பைப் போர்த்திக்கொண்டு ஸேவித்தல் பகவானை
2. ப்ரேதத்தை அநுகமனம் செய்துவிட்டு ஸ்நாநம் செய்யாமல் பகவத்பூஜை செய்தல்
3. பகவத் ஸந்நிதிக்கு அருகில் மலமூத்ர விஸர்ஜனம் செய்தல்
4. பகவத் சந்தியில் பகவத் விஷயமில்லாத வெட்டிப் பேச்சுகளை பேசுதல்
5. பகவத் சந்நிதியில் ஏற்றிய விளக்கை வேறிடத்திற்கு கொண்டு போதல்
6. பகவானுடைய ஸந்நிதியில் சொள் பெருக்குக் கொண்டு காலை நீட்டிக்கொண்டு தூங்குதல்
7. பகவானுடைய ஸந்நிதிக்கு சமீபத்தில் இருப்பவர்களையும் பகவானை ஸேவிப்பதற்கு வந்தவர்களுமாகிய சண்டாளர்கள் பதிதர்களை ஸ்பர்சித்ததால் தீட்டு என்று ஸ்நானம் செய்ய நினைப்பவர்கள்.
8. பகவானுடையவும். ஸ்ரீ வைஷ்ணவர்களுடைய ஸ்ரீ பாத தீர்த்தத்தை சாப்பிட்ட பிறகு ஆசமனம் செய்தல்
9. வாஹனங்களிலாவது பாதுகைளிலாவது ஏறிக்கொண்டு பகவத் ஸந்நிதிக்கு செல்லுதல்
10. பகவான் எதிரில் பிரணாமம் செய்யாதிருத்தல்
11. ஒரு கையாலே பிரணாமம் பண்ணுதல்
12. பகவான் எதிரில் தன்னைத்தானே பிரதக்ஷிணமாகச் சுற்றிக் கொள்ளுதல்
13. தான் அசுத்தனாக இருக்கும்போதும், தீட்டுடன் இருக்கும் போதும் பகவானை பிரணாமம் செய்தல்
14. பகவானுக்கு எதிரில் காலை நீட்டுதல் - ஆஸனத்தில் அமருதல்- சாப்பிடுதல் - ரஹஸ்யமாக பேசுதல் வீணாக கூச்சலிடுதல் - அழுதல் - சண்டை செய்தல் - அநுக்ரஹித்துக் கொள்ளுதல் ஸ்திரிகளிடத்தில் ஆசை வைத்துப் பேசுதல் - அபாந வாயுவை விடுதல் - கம்பளியினால் போர்த்துக்கொள்ளுதல் - அய்யரை நிந்தித்தல் - ஸ்தோத்திரம் செய்தல்.
15. பகவானுக்கு நிவேதனம் செய்யாத வஸ்துவை சாப்பிடுதல் அந்த அந்த காலத்தில் உண்டான பழம் முதலியவைகளை பகவானுக்கு சமர்பிக்காமலிருத்தல்
16. பகவானுக்கு பின்புறத்தைக் காட்டிக்கொண்டு உட்காருதல்
17. ஆசார்யனிடத்தில் பேசாமல் மௌனமாயிருத்தல்
18. தன்னை ஸ்தோத்ரம் செய்து கொள்ளுதல்
19. பகவானை நிந்தித்தல்
20. பகவானுடைய திவ்ய மங்கள விக்ரஹத்தில் உலோகம் என்கிற புத்தியையும் ஆசார்யனிடம் மநுஷ்யன் என்கிற புத்தியையும் வைத்தல்.
21. பாகவதர்களுக்கு அபசாரம் செய்துவிட்டுப் பகவானை ஸேவித்தல்.
22. புது தான்யங்களை பகவானுக்கு ஸமர்ப்பிக்காமலிருத்தல்
23. புஷ்பங்களை ஸமர்ப்பிக்காமல் தூபம் சமர்ப்பிப்பது
24. பேரிகை முதலிய வாத்யங்களை முழக்காமல் பகவானைத் துயிலெழப்பண்ணுவது.

# திருமங்கையாழ்வாரும், தேசிகனும் காணும் திரு அட்டபுயகரப் பெருமாள்

முயற்சி: க்ருஷ்ண குமார தாத தாஸன், புண்ணிய புரி (பூனா)

## முன்னுரை:

சில நாட்கள் முன்னர்தான் திருஅட்டபுயகரத்து பெருமாள் க்ஷேத்ரத்தில் சம்ப்ரோக்ஷணம் நடைபெற்றது. ஒளிபரப்பாக அதைக்காண நேர்ந்த தருணத்தில், தோற்றிய எண்ணத்தால் அடியேனுக்குள் பெருமாளே புகுந்து கொண்டு, தானே தன்னைப்பற்றி எழுதி மகிழ்கின்றானோ? அறியேன். இனி எழுத்தில் வருவது அவன் தந்தருளிய வார்த்தைகளே!

சமஸ்க்ருத வார்த்தை அஷ்டபுஜன் என்பதை, தமிழில் குறிப்பிடுகையில், அட்டபுயன் என மாற்றி, பெருமாளின் திருநாமமாகவே கொள்வோம்.. பொதுவாக, ஆழ்வார்கள் பெருமாளை அந்தந்த திவ்யதேசத் தலத்தை வைத்தே அழைப்பது வழக்கம். ஆகவே, அட்டபுயன் வஸிக்கும் திருத்தலம் என்பதை அட்டபுயன் + க்ருஹம் (கர) என்பதாக்கி இரண்டையும் சேர்த்து அட்டபுயவகரம் என்றாகியது மருவி அட்டபுயகரம் என்று ஆகியிருக்கக் கூடும்.. கலியன் என்னும் திருமங்கை ஆழ்வார் தம் காதலை வெளிப்படுத்த பரகால நாயகி பாவமேந்தி, தாம் கண்ட, கேட்டு பிரமித்த அட்டபுயகர எம்பெருமான் கோலமதை தமது தோழியருக்கும், தா யாருக்கும் சொல்லி வியப்பதாக அமைந்துள்ளது. இது பெரிய திருமொழி 2ம் பத்தில் 8வது பதிகத்தில் பாசுரங்களாகத் தந்தருள்கின்ற ஆழ்வார் விஷயங்களை, ஸ்வாமி தேசிகன் ஸ்தோத்ர பாடமாக அருளிய அஷ்டபுஜாஷ்டக சுலோகங்களையும் சேர்த்து அனுபவிக்க முனைவதே இக் கட்டுரையின் நோக்கம் ஆகும். அடியேன் ஏற்கெனவே வியாக்யான வித்தகர்கள், பெரும் உரையாசிரியர்கள் எழுதிய விளக்கவுரைகள் மூலமாக வடித்துத் தந்தவற்றை படித்து அறிந்த சிலவற்றைக் கொண்டே விஷய,மாக்க முனைகின்றேன். ஆழ்வார், ஆசார்ய திருவடிகள் பலம் ஒன்றையே எண்ணித் துணிகின்றேன். ஏதேனும், தவறுகள், பிழைகள் தென்பட்டால் அடியேன் அறியாமையை மன்னித்து பொருளை மட்டும் கொள்ளப் பிரார்த்தனை வைக்கின்றேன்.. முதலில், அட்டபுயகரத் திருத்தலம் பார்ப்போம். பின்னர் ஆழ்வார், ஆசார்ய தேசிகன் பாடல்களை சுவைக்கலாம்.

## 1. அட்டபுயகரத் திருத்தல வரலாறு:

முற்காலத்தில், படைப்புத் தொழிலோன் பிரம்மன், தான் எண்ணி வந்த யாகத்தை நடத்த வேண்டி காஞ்சி புரத்தில் சத்தியவிரதம் என்னும் இடத்தை எம்பெருமானாலே அறிந்து தேர்வு செய்து திருமாலின் அருளுக்காக அவ்விடத்திலேயே பிரார்த்திக்க ஆரம்பித்தார். அதுசமயம், தமது பத்னியான சரஸ்வதியை அழைத்து வர முற்பட்ட போது பேதங்கள் உண்டானதால், கலைமகள் கோபமுற்றார். திருமால் உதவியால் அவளுடைய யாகத்தைத் தடுக்க முயற்சித்ததை, திருமால் எட்டு கரங்களுடன் தோன்றி ஏவப்பட்ட காளியை அடக்கி, அரக்கர்களையும் அழித்தார். எனவே இங்குள்ள இறைவனுக்கு அட்டபுயக்கரத்தோன் என்ற பெயர் நிலவுகிறது.. இவ்விடத்தில் ஆதிகேசவப் பெருமாள் என்னும் பெயரில் பெருமாள் எழுந்தருளியிருந்ததாகவும் அவரேதான் அட்ட புயக்கரப் பெருமாளாகவும் வந்தாரென்றும் ஒரு வரலாறும் உண்டு. மேலும் இத்தலத்திலே தான் கஜேந்திரனுக்கு முக்தி அளிக்க எட்டுகைகளுடன் தோன்றியதாக வரலாறு கூறுகிறது. ஆழ்வாரின் பாடல்களிலும் இப்பெருமானது தோற்றம், எழில், வடிவம் பரகால நாயகியாக கண்டதாகத் தெரிவிக்கின்றார். ஸ்வாமி தேசிகனோ பெருமாளுக்கென்று இயற்றிய பத்து சுலோகங்களில் முதல் எட்டில் பெருமாள் விஷயங்களுக்காகச் சொல்லி, இறுதியாக இரண்டு சுலோகங்களில் பயன் தரும் பலஶ்ருதிகளாகக் கொடுத்துள்ளார். தொண்டை மண்டலத்தில், காஞ்சிபுரம் நகரில் உள்ள இந்தத் திவ்ய தேசஸ்தலத்தில் தாயார் பத்மாசினி எனும் அலர்மேல் மங்கை மற்றும் மூலவராம் ஆதிகேசப் பெருமாளாக இருந்து கொண்டு அருள்பாலிக்கின்றனர்.

## 2. ஆழ்வாரின் அமுதத் திரட்டு:

மொத்தம் பத்து பாடல் பதிகங்கள் கொண்ட பெரிய திருமொழி இரண்டாம் பத்தில் எட்டாம் பதிகம் தான் திருவட்டபுயகர எம்பெருமானை, பரகாலநாயகி பார்த்து பரவசமாகி, பிரமிப்பாக காண்பதையும், அவரை

வினவிய போது, 'நான் தான் அட்டபுயகரத்துப் பெருமாள்' என்ற பதிலையும் தந்ததாக ஒவ்வொரு பாசுரங்களிலும் தெரிவிக்கின்றார். திரிபுரம் என்று தொடங்கி முதல் பாசுரம் ஸ்ரீநரஸிம்மனாகக் கண்டதை ஆழ்வார் நாயகி வியக்கின்றார்.

*திரிபுரம் மூன்று எரித்தானும்* மற்றை மலர்மிசை மேல் அயனும்வியப்ப**
*முரிதிரை மாகடல் போல்முழங்கி* மூவுலகும் முறையால் வணங்க**
*எரிஅன கேசர வாள்எயிற்றோடு* இரணியன்ஆகம் இரண்டு கூறா**
*அரிஉருஆம் இவர் ஆர்கொல்? என்ன* அட்ட புயகரத்தேன்என்றாரே.*

சிவனும், பிரம்மனும் ஆச்சரியம் படுமளவு, பெரிய திருவாகரத்தோடும், உளைமயிர்கள் பிடரியோடும், வாள் போன்று பற்களோடும், அனல் பொங்கும் விழிகளோடும் ந்ருஸிம்ம வடிவமெடுத்து இரணியனது ஆகத்தை இரண்டாகப் பிளந்த தோற்றமுடைய மஹானுபாவனை பார்த்துப் பிரம்மித்து அவ்வுருவத்தை ஆர் என.வினவ, "நான் அட்டபுயகரத்தேன்" அதாவது அட்டபுயகர திவ்ய க்ஷேத்ர கோவிலில் வஸிப்பவன் என்று அவர் கூறியதாக தம்முடைய தாய் மற்றும் தோழிமாரிடம் தெரிவிப்பதாக அமைந்துள்ளது. மேலும் நாயகி, அவரது உருவம், வெந்திறல் வீரரில், வீரராம், இராமர் போன்றும், குறளுருவாய் வந்து பின் நிமிர்ந்து மூவுலகையும் அளந்த திரிவிக்கிரமன் வடிவமாகவும் கண்டதால், மீண்டும் ஆரென வினவுகின்றாள். அப்போதும், "நான் அட்டபுயகரத்தேன்" என்றாரே, எனக் கூறுகின்றாள் நாயகி. மீண்டும், உற்றுப் பார்த்தாயா, எனக் கேட்டதற்கு பதில் தெரிவிப்பது போல, அவரது திருக்கைகளில் எட்டு விதமான ஆயுத விஷயங்களை கண்டதாகச் சொல்கின்றாள். முறையே அவை, வாளி(அம்பு), வில், நாந்தக வாள், கதை,சங்கு, சக்கரம், கேடயம், மலர் என்பனவாகும். குறிப்பாக, ஆயுதங்கள் எதிரிகளுக்காக இருப்பினும், கையில் மலர் கொண்டு எம்மை வசீகரித்து தம்மிடம் ஆதரத்தை பெருக்குகின்றார் போலும், என்கின்றார் பெண்பாவத்தோடு இருக்கும் ஆழ்வார்.கண்ணனாகவும் தோற்றம் காட்டும் பெருமானை நீர் ஆரோ என்ற ஆர்வம் மிகக் கேட்டு "நான் அட்டபுயகரத்தேன்" என்று அவரே சொல்லி என் ஆசையையும், அவர் மேல் காட்ட வைக்கும் அழகை வெளிப்படுத்துகின்றாரே! என்பதாக தலைவி பாடுகின்றாள். பாருங்கள்...

*எங்ஙனும் நாம்இவர் வண்ணம் எண்ணில்* ஏதும் அறிகிலம் ஏந்திழையார்**
*சங்கும் மனமும் நிறையும் எல்லாம்* தம்மனஆகப் புகுந்து**
*தாமும்பொங்கு கருங்கடல் பூவைகாயா* போதுஅவிழ் நீலம் புனைந்தமேகம்**
*அங்ஙனம் போன்றிவர் ஆர்கொல் என்ன* அட்டபுயகரத்தேன் என்றாரே.*

அவரது வடிவழகில் மயங்கி, தன்னையும் தருகின்ற நிலையில் ஆழ்வார், என்னிடம் வாய் திறந்து மொழியாக கூறிப் பணித்தார் என்று பெருமாள் பேசியதை தெரிவிப்பது இதன் ஒன்பதாம் பாசுரத்தில், இவ்வாறாக...

*தஞ்சம் இவர்க்கு என்வளையும்நில்லா* நெஞ்சமும் தம்மதே சிந்தித்தேற்கு**
*வஞ்சிமருங்குல் நெருங்கநோக்கி* வாய்திறந்து ஒன்று பணித்ததுஉண்டு**
*நஞ்சம் உடைத்துஇவர் நோக்கும்நோக்கம்* நான் இவர் தம்மை அறியமாட்டேன்**
*அஞ்சுவன் மற்றுஇவர்ஆர் கொல்? என்ன* அட்டபுயகரத்தேன்என்றாரே.*

என்னுடைய கைவளைகள் மற்றும் நெஞ்சமும் என் வசமுமில்லை. அழகால் மயக்கிய அவரிடம் சேர்ந்து விட்டனவே. எனக்கென்றும் இனி ஏதுமின்றி, உடல் சோர்ந்து, மெய் மெலிவுற்று இருக்கையிலும், ஏற்கனவே இருந்தவற்றை எல்லாமே எடுத்துச் சென்று விட்ட பின்னும், இவளிடம் இன்னும் பெற முடியுமோ என்ற நோக்கோடு, என்னுடையை நோக்குகின்ற கண்களும், பார்வைகளும் என்னை அஞ்சுற வைக்கின்றனவே ஒருவேளை இரட்சிக்க வந்தவரா இல்லை வேறேதும் செய்ய வந்தவரா, எனப் பதற வைக்கின்றாரே!. பார்வையே நெருப்புப் போல ஆகி, இவரார் கொல்? எனக் கேட்கவும் எனக்கு அச்சத்தை உண்டாக்கியதைப் புரிந்து கொண்டவர் போல, என்னைப் பார்த்து அஞ்ச வேண்டாம் என்றும், அதற்காவே தான் அட்டபுயகரம் வந்து நின்றிருக்கின்றேன் என்றும், என்னைத் தேற்றும் விதமாக, நான் அட்டபுயகரத்தேன் என்றும் வாய் விட்டுச் சொல்லி விட்டார் என்கின்றாள் நாயகி. தனது அச்சமும் நீக்கிய பெருமான் என்று கொண்டாடுகின்றார், ஆழ்வார். கவிதை நயமும், காதல் நயமும் தெய்வீகமும் கலந்த பாசுர சுவை அல்லவா? இறுதியில் இப்பாசுரங்களைப் பயில வல்லார்க்கு இடமாகும் வைகுந்தமே என்பதாக பயன் சொல்லித் தலைக்கட்டுகின்றார்.

*மன்னவன் தொண்டையர் கோன்வணங்கும்* நீள்முடி மாலை வயிரமேகன்**

*தன்வலி தன்புகழ் சூழ்ந்தகச்சி* அட்ட புயகரத்து ஆதிதன்னை*
கன்னிநல் மாமதிள் மங்கைவேந்தன்* காமருசீர்க் கலிகன்றி*
குன்றா இன்இசையால்சொன்ன செஞ்சொல்மாலை* ஏத்தவல்லார்க்கு இடம் வைகுந்தமே.*

திருமங்கை ஆழ்வார், அட்டபுயகரப் பெருமானைக் கஜேந்திர வரதனாக கருதினாற் போலவே, மூன்றாம் திருவந்தாதி பாடிய ஸ்ரீபேயாழ்வாரும் காட்டும் பாசுரம் இதோ..

*தொட்ட படைஎட்டும்* தோலாத வென்றியான்,*
அட்ட புயகரத்தான் அஞ்ஞான்று,* - குட்டத்துக்
கோள்முதலை துஞ்ச* குறித்துஎறிந்த சக்கரத்தான்*
தாள்முதலே நங்கட்குச் சார்வு*

எட்டுத் திருக்கைகளில் எட்டுவித ஆயுதங்களை தாங்கி, திருவட்டபுயகரப் பெருமானே, எளிய கஜேந்திரனின் குரல் கேட்டு ஓடிவந்து முதலைமீது சக்கரத்தை ஏவி, காப்பாற்றியதால், அவனது திருவடிகளே, நமக்கும் சார்வாக இருந்து நம்மையும் காப்பாற்றும் என்பதே இவ்வாழ்வாரின் தெளிவு.

அட்டபுயகரத்துப் பெருமானை ஆழ்வார்களின் தமிழ் அமுதத்தைப் பருகிய நாம், இனி, ஸ்வாமி தேசிகன் அஷ்டபுஜாஷ்டகம் கவி வன்மையையும் பருகி காணலாம் வாருங்கள்.

## 3. ஸ்வாமி தேசிகன் அருளிய ஸ்ரீஅஷ்டபுஜாஷ்டகம் ஸ்தோத்ரம்:

திருக்காஞ்சியில் திரு அட்டபுயகர க்ஷேத்திரதில் எழுந்தருளியிருந்து நமக்கெல்லாம் ரக்ஷனாக இருப்பதோடு, அவனிடம் சரணாகதி பண்ண வேண்டும் என்று ஆசையுள்ள அனைவருக்குமாக இந்த அஷ்ட புஜாஷ்டகம் ஸ்தோத்திரம் ஸ்வாமி தேசிகன் தந்தருளி இருக்கின்றார் என்பதுதான் சிறப்பு. ஒருகையில் சங்கும் இன்னொரு கையில் சக்கரமும் தரித்தபடியே, மண்ணோரும், விண்ணோரும் போற்றிப் புகழ்ந்து கொண்டாடும் வண்ணம், மலர்மேல் மங்கையுடன் அலைகடல் போன்று இப்பெருமாள் நின்று கொண்டு தமது பரத்துவத்தைக் காட்டி அருள்வதாக வேங்கடக் கவி சாற்றி உரைக்கின்றார். பத்து சுலோகங்களில் எட்டு பாடல்கள் ஒவவொன்றிலும் லோகத்திற்கு க்ஷேமத்தைக் கொடுக்கவும், கடைசி இரண்டிலும் பலத்தைச் சொலலி ஶரணாகத ரக்ஷணத்வமும் பிரார்த்தனை சொல்லுகின்றதை அறியலாம். முதல் பாடலில் கஜேந்திரனுக்கு அருளியதை காட்டும் பெருமானே நமக்கும் ரக்ஷணம் செய்ய இங்கே நின்றருளுகின்றான் என்கின்றார். அந்த சுலோகம்.

*க³ஜேந்த்³ரரக்ஷாத்வரிதம் ப⁴வந்தம் க்³ராஹைரிவாஹம் விஷயைர்விக்ரு'ஷ்ட: ।
அபாரவிஜ்ஞாநத³யாநுபா⁴வமாப்தம் ஸதாமஷ்டபு⁴ஜம் ப்ரபத்³யே ॥*

ஒரு முதலையினால் அடர்ப்புண்ட கஜேந்திரனுக்காக தமது அபார கருணையினால் காப்பதற்காக ஓடோடி வந்து துயர்தீர்த்த அஷ்டபுஜனான நீயே பல முதலைகளால் அவதியுள் தவிக்கும் அடியேன் இடரைக் களைந்தருள வேண்டும் என்று அவனடிகளை தஞ்சம் புகுகின்றார். இரண்டாவது சுலோகத்தில் கூறுவது

*த்வதே³கஶேஷோঽஹமநாத்மதந்த்ரஸ்த்வத்பாத³லிப்ஸாம் தி³ஶதா த்வயைவ ।
அஸத்ஸமோঽப்யஷ்டபு⁴ஜாஸ்பதே³ஶ ஸத்தாமிதா³நீமுபலம்பி⁴தோঽஸ்மி ॥*

"**நானே அட்டபுயகரத்தேன்**" என்று காட்டிக் கொண்டு நிற்கின்ற பெருமாளாகி, தன்னை அவனே தனது திருவடித்தாளுக்காய் ஆக்கிப் பற்றிடவைத்தாய் என்று சொல்வது திருமங்கை ஆழ்வாருடைய பாசுர சிந்தனை தேசிகனுக்கும் இருந்ததைக் காட்டுகின்றது. அடுத்ததாக,

*ஸ்வரூபரூபாஸ்த்ரவிபூ⁴ஷணாத்³யை: பரத்வசிந்தாம் த்வயி து³ர்நிவாராம் ।
போ⁴கே³ ம்ரு'து³பக்ரமதாமபீ⁴ப்ஸந் ஶீலாதி³பி⁴ர்வாரயஸீவ பும்ஸாம் ॥*

அஷ்டபுஜப் பெருமாளே! உனது திவ்யாயுதங்களே ஆபரணங்களாக காட்டிடும் திவ்ய வடிவழகால் பரத்வ, ஸௌஸீல்ய, ஸௌலப்ய குணங்களெல்லாம் காட்டிய வண்ணம் இருக்கின்றாயே! இந்த சுலோகமும் திருமங்கை ஆழ்வார் காட்டும் எட்டு ஆயுதங்களாகத் தாங்கிய எட்டுக் கரங்களில் மயங்கிய நிலையில்

பிரமிக்கத் தானே அட்டபுயகரத்தேன் என்று பெருமாளே சொல்வதை இங்கே நினைவு கூரலாம். இனி நான்காவது பாடலில்,

*ஶக்திம் ஶரண்யாந்தரஶப்³த³பா⁴ஜாம் ஸாரம் ச ஸந்தோல்ய ப²லாந்தராணாம் ।*
*த்வத்³தா³ஸ்யஹேதோஸ்த்வயி நிர்விஶங்கம் ந்யஸ்தாத்மநாம் நாத² விப⁴ர்ஷி பா⁴ரம் ॥*

என்பதாக, ரக்ஷகர்கள் என்று நினைத்து இருக்கும் தேவர்களுக்கும் நீயே ரக்ஷகனாக விளங்குவதால் அவர்களும் நின்னையே சந்தேகமின்றி அடைகின்றனர். அவர்களையும் நீயே காத்தருள்கின்ற சக்தியாக இருக்கின்றாய் என தேசிகன் சொல்கின்றார். இதுவும், கலியனுடைய முதல் பாசுரமான திரிபுரம் மூன்று எரித்தானும் எனத் தொடங்கும் பாசுரம் பரக்கப் பாடும், சிவன், பிரம்மன் இருவருக்கும் வியப்பைத் தோற்றுவிக்கும் பெருமாள் என்பதை வலியுறுத்துகின்றது.

*அபீ⁴திஹேதோரநுவர்தநீயம் நாத² த்வத³ந்யம் ந விபா⁴வயாமி ।*
*ப⁴யம் குத: ஸ்யாத்த்வயி ஸாநுகம்பே ரக்ஷா குத: ஸ்யாத்த்வயி ஜாதரோஷே ॥*

இந்த சுலோகத்தில் தேசிகன் அஷ்டபுஜப் பெருமாளன்றி வேறாரிடமும் சென்று அபயஸித்தி கேட்க விருப்பமில்லை. ஆச்ரயிக்கவும் போவதில்லை என திட நம்பிக்கை காட்டுகின்றார். காரணம் பெருமாளின் கல்யாணகுணங்களில் மேலான தயையே மிகுந்து இருப்பதாலே ஆகும். ஆறாவது சுலோகத்தில், இதனைத் தொடர்ந்து

*த்வதே³கதந்த்ரம் கமலாஸஹாய ஸ்வேநைவ மாம் ரக்ஷிதுமர்ஹஸி த்வம் ।*
*த்வயி ப்ரவ்ரு'த்தே மம கிம் ப்ரயாஸைஸ்த்வய்யப்ரவ்ரு'த்தே மம கிம் ப்ரயாஸை: ॥*

லக்ஷ்மீ பதியான நீயே அடியேனைக் காத்தருள வேண்டும். பிராட்டியின் கருணை பிரபாவத்தால் அன்றி எந்தப் பிரயாஸையும் செய்தறியாத அடியேனை உன்னருள் தந்தே காக்க வேண்டும் என்பது ஸ்வாமி தேசிகன் காட்டும் திடமான விசுவாசம். உன்னாலல்லால் யாவராலும் ஒன்றும் குறை வேண்டேன் என்ற ஆழ்வார் வரிகளே நமக்கு தோன்றுகின்றது அல்லவா?.

*ஸமாதி⁴ப⁴ங்கே³ஷ்வபி ஸம்பதத்ஸு ஶரண்யபூ⁴தே த்வயி ப³த்³த⁴கக்ஷ்யே ।*
*அபத்ரபே ஸோடு⁴மகிஞ்சநோऽஹம் தூ³ராதி⁴ரோஹம் பதநம் ச நாத² ॥*

மேலே உள்ள சுலோகத்தில், தம்மால் பக்தி மற்றும் ஞான யோக அனுஷ்டானங்களை தவறில்லாமல் செய்ய முடியாது போனாலும், அஷ்டபுஜ பெருமாளின் காக்கும் இயல்போடும், ஸர்வ சரண்யரனாக இருக்கும் நிலையில் அடியேனுக்கு ஏன் கஷ்டங்கள் வரும்? வரவே வராது என்பதாக உறுதி பூண்டு இருக்கின்றார். அடுத்தது, தான் நம்பி இருப்பது பிராட்டியின் பெரும் கருணையும், பெருமாளின் வாத்ஸல்யமுமே என்பதாக சொல்லுகின்றார்.

*ப்ராப்தாபி⁴லாஷம் த்வத³நுக்³ரஹாந்மாம் பத்³மாநிஷேவ்யே தவ பாத³பத்³மே ।*
*ஆதே³ஹபாதாத³பராத⁴தூ³ரமாத்மாந்தகைங்கர்யரஸம் விதே⁴யா:*

இந்த எட்டாவது பாடலில் பிராட்டியார் போற்றிக் கொண்டாடும் நின் பாதாரவிந்தங்களை அடியேனும் பற்றி உய்ய உபாயமாக நீரே காட்டித் தந்தருளியதைப் பாடுகின்றார். அதற்குண்டான அபசாரங்களற்ற கைங்கர்யப் பணிகளையும் பணித்தருள பெருமாளிடமே மன்றாடுகின்றார். இவை அனைத்தும் பாடிய பின் பலஸ்ருதிகளாக இரண்டு சுலோகங்களைத் தருகின்றார். முதலில், இந்த அஷ்டபுஜாஷ்டகம், ப்ரபத்தி என்னும் சரணாகதிக்கு வழித்துணையாகவும், அப்பாதையில் ஈடுபாடு கொள்வதால் பெருமைகளையும் கூட்ட வல்லது என்று,

*ப்ரபந்நஜநபாதே²யம் ப்ரபித்ஸூநாம் ரஸாயநம் ।*
*ஶ்ரேயஸே ஜக³தாமேதச்ச்²ரீமத³ஷ்டபு⁴ஜாஷ்டகம் ॥*

என்பதான ஒன்பதாவது சுலோகம் தெரிவிக்கின்றது. கடைசியான பத்தாவது சுலோகத்தில், நான்கு திருக்கைகளைக் கொண்டவனே அஷ்டபுஜப் பெருமாளாக இருப்பதால், அவன் திருவடிகளில் சரணாகதர்களாகச் சேருவோர், வேங்கடக் கவியான தாம் இயற்றிய அஷ்டபுஜாஷ்டகம் ஸ்தோத்திரம் ஏற்று எம்பெருமானை பிரார்த்தனை செய்யலாம். அவனது இன்னருள் கிட்டும்.

*ஶரணாக³தஸந்த்ராணத்வரா த்³விகு³ணபா³ஹுநா ।*
*ஹரிணா வேங்கடேஶீயா ஸ்துதி: ஸ்வீக்ரியதாமியம் ॥*

ஶரணாகதனுக்கும், ஶரணாகதி செய்து பெருமாள் திருவடிகளில் வீழ்ந்து அருள்பெறத் துடிக்கின்ற பேர்கள் ஸ்வாமி தேசிகன் வழங்கிடும் ஸ்தோத்திரம் சொல்லி அதனைப் பலனாக அவர்களுக்கு தந்தருள வேண்டும் என்று அஷ்டபுஜப் பெருமாளை செய்வதாக உள்ளது. இந்த சுலோகங்கள் அட்டபுயகரத்தான் திருவடிகளில் நித்ய கைங்கர்யத்தைப் பெற்றுத் தரும் என்பதில் உறுதிபட நமக்காகவே காட்டுகின்றார்.

## முடிவுரை:

திருஅட்டபுயகரத்து ஆதிகேசவப் பெருமாளை ஆழ்வார்களும், ஸ்வாமி தேசிகனும் தமது கவிகளின் சீர்மையால் எவ்வாறெல்லாம் பாடி அவனது திருவருளுக்குப் பாத்திரர்களாகும் விதங்களை, கற்றுத் தெரிந்தளவில் அடியேன் இங்கே கட்டுரையாகப் பகிர்ந்து கொண்டேன். ஸ்வாமி தேசிகன் சாதித்தபடி எல்லோருக்கும் பெருமாள் திருவடிகளில் நித்ய கைங்கர்யம் பெற்று சிறக்கப் பிரார்த்தித்தபடி, ஆழ்வார்கள், ஆசார்யன் திருவடிகளுக்குப் பல்லாண்டு பாடி நிறைவு செய்கின்றேன்.

சுபமஸ்து.

*****************************************************************************************************

**य इदंशृणुयात् नित्यं पश्चापि परिकीर्तयेत् /**

**नाशुभं प्रापुयात् किंचित् सोऽमुत्रेह च मानवः //**

***ய இதம் ஸ்ருணுயாத் நித்யம் பஸ்சாபி பரிகீர்த்தயேத்***

***ந அசுபம் ப்ராப்னுயாத் கிஞ்சித்: சோமுத்ரேஹ ச மானவ:***

***--விஷ்ணு ஸஹஸ்ரநாமம்***

***"பகவன் நாமாக்களைக் கேட்பவனும், சொல்பவனும் இங்கும் அங்கும் எத்தனைத் துயர்களையும் (அசுபங்களையும்) சிறிதும் பெறான்" என்பர் பீஷ்மாசாரியர்***

# நல்ல பதில் கிடைத்தது – பாகம் 9
## (மேல்மா. ல. வேணுகோபாலன், சென்னை 600033)

*ப்ராஹ்மணத் தன்மை பிறப்பால் வருகிறது என்று மஹாபாரதத்தில் உள்ள ஒரு கதை மூலம் முன் இதழில் விவரித்தோம்.*

*ஆனால் மஹாபாரதத்தில், பல இடங்களில், குணத்தாலும், செய்யும் செயல்களாலும், ப்ராஹ்மணத் தன்மை வருகிறது என்று சொல்லப் பட்ட உதாரணங்களும், ஜாதிகள் பற்றிய குறிப்புகளும் உள்ளன. சில முக்கியமான விஷயங்களை மட்டும் விவரிப்போம்.*

*மஹாபாரதத்தில் உள்ள பதினெட்டு பர்வங்களில், மூன்றாவதான வன பர்வம், 177 ஆம் அத்தியாயம்* ***அஜகர பர்வம்****. இந்த பாகத்தில், பீமன் காட்டில் ஒரு மலைப் பாம்பிடம் சிக்கிக் கொள்வான், அவனைக் காக்க யுதிஷ்டிரன், அந்த மலைப்பாம்பின் கேள்விகளுக்கு பதில் அளித்து, பீமனை பாம்பின் பிடியில் இருந்து விடுவிப்பார். அந்த பாம்பு கேட்ட முதல் கேள்வி :*

***" ப்ராஹ்மண : கோ பவேத் ராஜந் வேத்யம் கிம் ச யுதிஷ்டிர |***
***ப்ரவீத் ஹ்திமதிம் த்வாம் ஹி வாக்யைர் அநுமிமீமஹே || " (177-15)***

*எவன் ப்ராஹ்மணன் ஆகிறான்? சொல் யுதிஷ்டிரா என்றது. அதற்கு யுதிஷ்டிரனின் பதில் :*

***"சத்யம் தானம் க்ஷமா சீலம் ந்ருசம்ஸ்யம் தமோ க்ருணா |***
***த்ருஷ்யந்தே யத்ர நாகேந்த்ர ச ப்ராஹ்மண இதி ஸ்ம்ருத || "***

***- ஆரண்ய பர்வம் 177-16***

*உண்மை, கொடை, பொறுமை, நல் ஒழுக்கம், கருணை, தன்னடக்கம், நல்லெண்ணம் முதலியன எவனிடத்தில் காணப்படுகிறதோ அவனே பிராஹ்மணன் " என்று யுதிஷ்டிரன் கூறினான்.*

***"சூத்ரே ச ஏதத் பவேத் லக்ஷ்யம் த்விஜே தத் ச ந வித்யதே |***
***நவை சூத்ரோ பவேத் சூத்ரோ ப்ராஹ்மணோ ந ச ப்ராஹ்மண : ||"***

***-ஆரண்ய பர்வம் 177-20,21,22***

*" சூத்ரனிடத்தில் எந்த அடையாளம் இருக்கிறதோ, அது ப்ராஹ்மணன் இடத்தில் இல்லை. சூத்ர ஜாதியில் பிறந்ததனால் ஒருவன் சூத்ரன் ஆக மாட்டான். அது போல், ப்ராஹ்மண ஜாதியில் பிறந்ததனால், ப்ராஹ்மணனும் ப்ராஹ்மணன் ஆக மாட்டான்.*

*ஏ சர்ப்பமே, எவனிடத்தில் இந்தச் சமம், தமம் உள்ளிட்ட குணங்கள் காணப் படுகின்றனவோ அவன் ப்ராஹ்மணனாக எண்ணப் படுகின்றான். எவனிடத்தில் இந்த நல்ல குணங்கள் காணப் படவில்லையோ அவனை சூத்ரன் என்று அறியப் பட வேண்டும். இவை சூத்திரனிடத்தில் காணப்படுமானால் அவன் சூத்திரனும் இல்லை, இவை பிராம்மணனிடம் காணப்படாவிடில் அவன் பிராஹ்மணனும் இல்லை. "*

*மேலும், அந்த மலைப் பாம்பு, சொன்னது :*

***"யதி தே வ்ருத்ததோ ராஜன் ப்ராஹ்மண: ப்ரசமீக்ஷித: |***
***வ்யர்த்தா ஜாதி ததா ஆயுஷ்மன் க்ருதி யாவத் த்ருஷ்யதே" ||***

*அரசனே! ஒழுக்கத்தால் ஒருவன் ப்ராஹ்மணன் என்று சொன்னால், அப்பொழுது ப்ராஹ்மணனுக்கு உரிய செய்கை இல்லாதவரையில், இந்த ஜாதி பயன் அற்றது என்று சொன்னது. (ஸ்லோகம் 177 -25)*

*அதற்கு யுதிஷ்டிரர், 'மகா ஸர்ப்பமே! பேரறிவாளனே! இந்த மனித ஜாதியில் இப்பொழுது எல்லாப் புருஷர்களும் எல்லா ஸ்த்ரீகளிடமும் குழந்தைகளை பிறப்பிக்கப் பண்ணுகிறார்கள். ஆகையால், எல்லா வர்ணங்களும் கலந்து போவதால் ஜாதியானது எவ்விதத்தாலும் சோதனைக்கு தகாது என்பது என்னுடைய எண்ணம்.*

***"சர்வே சர்வா ஸ்வபத்யானி ஜனயந்தி யதா நரா: |***
***வாக் மைதுனம் அத ஜன்ம மரணம் ச சமம் ந்ருணாம்" ||***

*மனிதர்களுக்கு வாக்கும், ஆண் பெண்களின் சேர்க்கையும், பிறப்பும், இறப்பும் சமம் ஆனவை.*

''நாங்கள் பிராம்மணர்களாய் இருக்கிறோமோ அல்லது ப்ராஹ்மணர்களாக இல்லாமல் இருக்கிறோமோ, எப்படியிருந்தாலும் யாகம் செய்கிறோம்' என்கிற பொருள் உள்ள (**யே யஜாமஹ** என்கிற) வேதவாக்யமும், ஜாதியானது, பிறப்பினால் நிச்சயிக்கத் தக்கது அன்று என்னும் கருத்தில் பிரமாணம் / சான்றாகும்.

ஆகையால், தத்துவத்தைக் கண்டறிந்தவர்கள் ஆசாரமே (இந்த விஷயத்தில்) முக்யமாகச் கருதப்பட்டதென்று அறிகிறார்கள்.

தொப்புள்கொடி அறுப்பதற்கு முன்பே புருஷனுக்கு ஜாத கர்ம ஸம்ஸ்காரமானது விதிக்கப்படுகிறது. அப்படியே, இரு பிறப்பு உடையவர்களான ப்ராஹ்மண, க்ஷத்ரிய, வைஸ்ய ஜாதி என்ற மூன்று வர்ணத்தார்களுக்கும் முறையே குறிப்பிட்ட வயதில் உபநயனம் சொல்லப்பட்டிருக்கிறது.

(**இரு பிறப்பு விளக்கம்** : பறவையானது முதலில் முட்டையாக பிறந்து, பின் குஞ்சாக பிறப்பதால், இரு பிறப்பு ஆகும். சிறு வயதில் முளைக்கும் பால் பற்கள், கீழே விழுந்து, பின் மறுபடியும் முளைக்கும். ப்ராஹ்மண, க்ஷத்திரிய, வைஸ்ய ஜாதியில் பிறந்த ஆண்கள், முதலில், தாயின் கர்ப்பத்தில் இருந்து பிறந்து, பின் உரிய வயதில், உபநயனம் (பூநூல் அணிவிக்கும் ஸம்ஸ்காரம்) ஆகும் போது, பிறவி ஞானம் அடைய செய்யும் சடங்கு, இரண்டாவது பிறப்பாக கருதப் படுகிறது. பெண்களுக்கு திருமணம் என்னும் சடங்கே உபநயனம் என்னும் ஸம்ஸ்காரத்துக்கு சமம் ஆகும்.)

அந்த உபநயன ஸம்ஸ்காரத்தில் ஆணுக்கு, ஸாவித்ரி மாதாவாகிறாள்; ஆசார்யன் என்னும் குரு, பிதாவாகச் சொல்லப்படுகிறான். பிராம்மணன் வேதம் கற்காத வரையில், செய்கையினால் சூத்ரனுக்கு ஒப்பானவன்.

***" ஜன்மனா ஜாயதே ஶூத்ர : ஸம்ஸ்காராத் த்விஜ உச்யதே || "***

இப்படிப்பட்ட ஸம்சயத்தில் (தெளிவு இல்லாத நிலையில்) ஸ்வாயம்புவ மனு, 'வைதிக ஸம்ஸ்காரமில்லாவிட்டால் மூன்று வர்ணத்தார்களும் சூத்ரர்களுக்கு ஸமம் ஆவார்கள்' என்று கூறி இருக்கிறார்.

ஸர்ப்ப ராஜனே! ஸம்ஸ்காரமில்லாத விஷயத்தில் ஜாதிகள் கலப்பே முக்ய காரணமென்று காணப் பட்டிருக்கிறது. எவனிடத்தில் இக்காலத்தில் வைதீக ஸம்ஸ்காரத்துடன் கூடின நல் ஆசாரம் இருக்கிறதாக எண்ணப்படுகிறதோ அவனையே பிராம்மணனாக முன்னே சொல்லியிருக்கிறேன்'' என்று கூறினார் யுதிஷ்திரர்.

அந்த மலைப் பாம்பு, ''யுதிஷ்டிர! அறியவேண்டியதை அறிந்திருக்கிற உன்னுடைய வாக்கியமானது கேட்கப்பட்டது. நான் உன்னுடைய ஸஹோதரன் பீமஸேனனை விடுவிக்கிறேன் '' என்று கூறியது.

**( இந்த மலைப் பாம்பு ஆனது, பாண்டவர்களின் குலத்தில் ஐந்து தலைமுறைக்கு முன் பிறந்து, தான் செய்த நூறு அஸ்வமேத யாகத்தின் பலனால், தேவேந்திரப் பதவி பெற்ற நகுஷன் என்ற அரசன். அகஸ்திய மஹரிஷியின் சாபத்தால், தேவேந்திர பதவியை இழந்து மலைப் பாம்பாக ஆனான்).**

ஆக நற்குணங்கள் எங்கு இருக்கிறதோ அவனே பிராம்மணன் என்று மஹாபாரதம் இந்த ''அஜகர பர்வத்தில் '' சொல்கிறது.

(குறிப்பு : இந்த ஸ்லோகங்களின் எண்களும், பர்வ எண்களும், பல்வேறு மஹாபாரத மூல நூல் பதிப்புகளில் மாறி, மாறி உள்ளன. வாசகர்கள் இதை அறியவும்)

மேலும், மஹாபாரதத்தில், வன பர்வம், ஆரணேய பர்வத்தில், யக்ஷ ப்ரஸ்நம் என்ற ப்ரபலமான ஒரு பகுதி உள்ளது. அதில் யக்ஷனுக்கும், யுதிஷ்டிரனுக்கும் வாத-ப்ரதி வாதம் (கேள்வி -பதில்) நடந்து, இறுதியில் இறந்து கிடந்த பீமன், அர்ஜுனன், நகுலன், ஸஹாதேவன், என்ற நால்வரையும் யுதிஷ்டிரன் உயிருடன் மீட்கும் சம்பவம் உள்ளது.

அந்த கேள்விகளில், யக்ஷன் கேட்ட ஒரு கேள்வி, கீழே :

**" ராஜந் குலேந வ்ருத்தேந ஸ்வாத்யாயேந ஸ்ருதேந வா |**
**ப்ராஹ்மண்யம் கேந பவதி ப்ரப்ரூ ஹ்யேதத் ஸுநிஸ்சிதம் || "**

''ஹே ராஜனே! ப்ராஹ்மண்யம் என்பது குலத்தினாலா, ஒழுக்கத்தினாலா, வேதம் ஓதுவதாலா, சாஸ்த்ர ஞானத்தினாலா, எதனால் உண்டாகிறது ? இதனை நன்றாக நிச்சயித்து சொல்வாயாக ''

அதற்கு யுதிஷ்டிரன், '' யக்ஷனே !

- *ப்ராஹ்மண்யம் அடைவதற்கு, குலமும், வேதம் ஓதுதலும், சாஸ்த்ர பயிற்சியும் காரணம் ஆகாது. ஒழுக்கம் ஒன்றே ப்ராஹ்மணத் தன்மை உடைய காரணம். அதில் ஸந்தேகம் இல்லை.*
- *ஆதலால், ப்ராஹ்மணன் ஒழுக்கத்தை தன் முயற்சியானால் பாதுகாக்க வேண்டும். ஒழுக்கம் குன்றாத ப்ராஹ்மணன் குறைவு அடைய மாட்டான்.*
- *ஒழுக்கத்தினால், கெட்டுப் போன ப்ராஹ்மணன் கெட்டுப் போனவனே. படித்தவர்கள், அறிவு புகட்டுபவர்கள், சாஸ்த்ர சிந்தனை உள்ளவர்கள், இவர்கள் அனைவரும் சோகத்துடன் இருந்தால், அவர்கள் மூடர்களே.*
- *எவன் ஒருவன், தான் கற்றபடி நடப்பானோ, அவனே பண்டிதன்.*
- *நான்கு வேதங்களையும், நன்றாக கற்று அத்தியயனம் செய்தவனாக இருந்தாலும், கெட்ட நடத்தை உள்ளவனாக இருந்தால், அவன் சூத்ரனைக் காட்டிலும் கீழ்ப் பட்டவன் ஆகிறான் .*
- *அக்நி ஹோத்ரத்தில் பற்று உள்ளவன் ஆகவும், இந்த்ரியங்களை அடக்கினவன் ஆகவும் இருப்பவன், ப்ராஹ்மணனாக கருதப் படுகிறான் " என்று பதில் கூறினார். **(வன பர்வம் – ஆரணேய பர்வம் – 107 முதல் 111 வரை – கீதா ப்ரஸ் பதிப்பு)***

*யக்ஷ ப்ரஸ்நம் மூலமாக, நாம் அறிந்து கொண்ட நல்ல பதில், "ப்ராஹ்மண தன்மையை அடைவது அரிதிலும் அரிது. இந்த பிறவியில் அதை அடைந்தவர்கள், வழி மாறி போகாமல், நல் ஒழுக்கத்துடன் இருப்பது மிக மிக அவசியம்.*

***"ஆசார ப்ரதமோ தர்மோ தர்மஸ்ய ப்ரபு: அச்யுத : "** என்கிறார் வ்யாசர்.*

*ஒழுக்கமே நம் உயர்வுக்கு சிறந்த வழி. இதை உணர்ந்து முடிந்த வரை ஆசார, அனுஷ்டானங்களை கடைப் பிடித்து வாழ முயல்வோம்.*

……………………………………………………………………………மேலும் தொடரும்





## குரோதி சித்திரை மாத திவ்ய பிரபந்தம்

**(கோதை லக்ஷ்மி ஸ்ரீநிவாஸன் – ஓசூர்)**

*சரியான பதில்களுக்கு பக்கம் 35 பார்க்கவும்*

**கேள்வி பதில்கள்**

## கேள்விகள்:-

*1)* இராமானுஜ நூற்றந்தாதி பாசுரங்களை நிறைவு செய்க.

அ) ‘சேமநல் ------ ------- ------- சீரிய நற்காமமும் என்று இவை நான்கு என்பர்....’

ஆ) ‘நாட்டிய -------- ------- மாண்டன, நாரணனைக் காட்டிய -------- -------- உற்றது.

இ) உணர்ந்த மெய்ஞ்ஞானியர் --------- --------- மணம் தரும் ------ ---------- இடம் தொறும் ....’

2) ‘பல்லாண்டு’ ப்ரபந்தத்தின் ‘ஆதி கூறுதும் அநந்தரம் கூறுமின்’ வரியைக் குறிப்பிடுக.

3) ‘உந்தையாவனென்றுரைப்ப நின் செங்கேழ் விரலினும் கடைக்கண்ணினும் காட்ட,
நந்தன் பெற்றனன் நல்வினையில் நங்கள்கோன் வசுதேவர் பெற்றிலனே’ – இங்ஙனம் வசுதேவர் இழந்த நன்மை குறித்து வருந்துபவர் யார்?

4) ‘.... விலங்குமால் வரைச்சரம் கடந்த கால் பரந்த காவிரிக்கரைக் குடந்தையுள் கிடந்தவாறு.....’ – இந்த வரிகளில்
திருமழிசை ஆழ்வார் காவிரி நதியை எவ்வாறு வர்ணிக்கிறார் ?

5) ‘ஏர்கொள் பூஞ்சுனைத்தடம் பதித்து இனமலர் எட்டு மிட்டு இமையோர்கள் பேர்களாயிரம் பரவிநின்றடி தொழும் பிரிதி சென்றடை நெஞ்சே!’ – திருப்பிரிதி திவ்ய தேசத்தில் தேவர்கள் எங்ஙனம் வந்து வணங்குவதாக கலியன் கூறுகிறார்?

6) பொய்கைஆழ்வார் திருவேங்கடம் திவ்யதேசத்தை எத்தனை பாசுரங்களில் மங்களாசாசனம் செய்துள்ளார் ?

7) திருப்பாவை பாசுரங்களையும் திவ்ய நாமங்களையும் பொருத்துக.

1. பத்மநாபன் – அ) உங்கள்,
2. தேவாதி தேவன் – ஆ) ஏற்ற கலங்கள்
3. பங்கயக்கண்ணன் – இ) கீழ் வானம்,
4. பெரியாய் – ஈ) ஆழி மழை.

8) ‘யானே தவஞ்செய்தேன் ஏழ் பிறப்பும் . . . இருந்தமிழ் நன்மாலை இணையடிக்கே சொன்னேன், பெருந்தமிழன் நல்லேன் பெரிது.’ – இங்ஙனம் தன்னை மிகவும் பெருமையாகக் கூறிக் கொள்ளும் முதலாழ்வாரில் ஒருவர் யார் ?

**9. 'அறிவிலா மனிசரெல்லாம் அரங்கமென்றழைப்பராகில், பொறியில் வாழ் நரகமெல்லாம் புல்லெழுந்தொழியுமன்றே' – இங்ஙனம் திருவரங்கத்தின் பெருமை கூறும் ஆழ்வார் யார்**

**10) 'குழாங்கொள் பேரரக்கன் குலம்வீய முனிந்தவனை . . . . குழாங்களாய் அடியீருடன் கூடி நின்றாடுமினே' – நம்மாழ்வார் இப்பாசுரத்தில் 4 குழாங்கள் கூறுகிறார். அவை என்னென்ன?**

**********************************************

# பெரிய வாச்சான் பிள்ளை திருவடி தஞ்சம்

**ஒரு முறை பெரிய வாச்சான் பிள்ளையிடம் அடியார் கோஷ்டிகள் ஸ்வாமி எங்களுக்கு தஞ்சமா யிருப்பது எது தேவரீர் அருளனும் என வேண்ட அவரோ**

**கலங்குகிறவனும் கலக்குகிறதும் கலங்கி கிடக்கிறவர்களும் தெளிவிக்கிறவனும் தெளிகிறவனும் தெளிந்தே இருப்பவனாயிருமாறே இருப்பது என கூறி அருளினார்**

**கலங்குகிறவன்= ஜீவாத்மா**
**கலக்குகிறது=அசித்து**
**கலங்கி கிடக்கிறவர்கள் =சம்சாரிகள்**
**தெளிவிக்கிறான்=ஆசாரியான்**
**தெளிகிறான்=சேதனன்**
**தெளிந்தேஇருக்கிறான்=பரமாத்மா** *...FB Nalini Gopalan*

***************************************************************************

**<u>த்ருப்தர்</u> --மறு பிறவிக்கு காரணமான கர்மங்களை ஒழித்து இந்தச் சரீர முடிவில் மோக்ஷம் பெற விரும்பி ப்ரபத்தி செய்பவர்கள். இவர்கள் செய்யும் ப்ரபத்திக்கு த்ருப்த ப்ரபத்தி என்று பெயர்.**

**எம்பெருமானுக்கு கைங்கர்யம் செய்வதற்கு பற்பல கருவிகள் உண்டு. அவற்றுள் மிகவும் முக்கியமானவை : மனம்–வாக்கு–செயல் என்பன. இவை ஒன்று பட்டு நின்றால்தான் தூய்மையோடு கைங்கர்யம் செய்ய முடியுமாதலின் இவை முக்கியமாகும்.**

# மத ஸார ஸங்க்ரஹம்
## அதிகாரம் 3 ஈச்வரன்
### By D.T. தாதாசாரி

..................தை மாத தொடர்ச்சி................

நான் ' என்று ஒருவர் சொன்னால் சொல்பவரோ கேட்பவரோ "சொல்பவருடைய உடல் வேறு. அதற்குள் இருக்கும் ஆத்மா வேறு. அந்த ஆத்மாவையே அந்தச் சொல் குறிக்கின்றது" என்று உணர்வதில்லை. இதற்கு நேர் விபரீதமாக உடலைக் குறிப்பதாகவே எண்ணுவர். இப்படி எண்ணுவது ப்ரமம். அதாவது திரிபு ஒன்றை மற்றொன்றாகக் கொள்வது. இதை 'தேஹாத்ம ப்ரமம்' (உடலை ஆத்மாவாக எண்ணுவது) என்றும் இதுதான் நமக்கு உண்டாகும் ஸகல கஷ்டங்களுக்கும் மூலகாரண மென்றும் பெரியோர் கூறுவர்.

ஆத்மாக்கள் எண்ணிறந்தவையாயினும் அவை எல்லாம் முன் கூறியபடி ஒரே விதமானவை. ஒன்றுக் கொன்று எவ்விதத்திலும் ஒரு சிறிதும் பேதமில்லா தவை. கொசு யானை, பன்றி சிங்கம், பரம நீசன் பரம உத்தமன், ஆண் பெண், அரசன் ஆண்டி என்றிப்படி உள்ள வேற்றுமைகளெல்லாம் உடலை மாத்திரம் பற்றி யவை. இவற்றுக்குள்ளிருக்கும் ஆத்மாக்களுக்குள் எவ்வித வேற்றுமையும் கிடையாது. மெழுகினால் செய் யப்பட்ட பல் வேறு உருவங்களுக்குள் தனித்தனியே பதிந்திருக்கும் மிகச் சிறிய தங்கத்துணுக்கு போன்றவை பலவேறு உடல்களுக்குள்ளிருக்கும் ஆத்மாக்கள். இப் படிப் பரஸ்பரம் எவ்வித வேற்றுமையுமில்லாத ஆத்ம வஸ்து வேறு; பல்வகையாலும் வேறுபட்டிருக்கும்உடல் வேறு என்பதை மறக்காமல் எப்பொழுதும் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.

இப்படி நம் விஷயத்தில் ஆத்மா வேறு, உடன் என்கிற சரீரம் வேறு, என்பது விளக்கப்பட்டது. இதை ஈச்வரன் விஷயத்திலும் கொள்ளவேண்டும். ஈச்வரனும் ஓர் ஆத்மா. ஒரு வஸ்துவின் உள்ளே புகுந்து பிரிய முடியாதபடி நின்று அதைத் தன்னிஷ்டப்படி தனக்காக உபயோகப்படுத்திக்கொள்ளும் அறிவுள்ள வஸ்து அந்த வஸ்துவின் ஆத்மா வெனப்படுகின்றது. நாம் நமது சரீ ரத்தை இப்படி உபயோகப்படுத்துகின்றோமாகையால் நாம் ஆத்மாவாகின்றோம். இப்படியே ஈச்வரனும் அவனுக்குரிய சரீரமுள்ளவனாகையால் அதைப் பற்ற அவனும் ஆத்மாவாகின்றான். ஆயினும் நமக்கும் அவ னுக்கும் விசேஷம் தோன்றுவதற்காக நம்மை ஜீவாத்மா வென்றும் அவனை பரமாத்மாவென்றும் சொல்கின்றோம். ஆகவே ஈச்வரனைப்பற்றி நாம் பேசும்போது 'பரமாத்மா வென்கிற அவனது ஸ்வரூபம் வேறு, அவனுடைய சரீரம் வேறு' என்பதையும், 'இப்பொழுது ஸ்வரூபத் தைப் பற்றிப் பேசுகிறோம், இப்பொழுது சரீரத்தைப் பற்றிப் பேசுகிறோம், என்பதையும் கலக்கமில்லாமல் கெட்டியாகப் புத்தியில் தரிக்கவேண்டும். இதை மறந் தால் ஈச்வரனைப்பற்றிய விஷயம் ஒன்றும் விளங்காது. எல்லாம் ஒரே குழப்பமாகவிருக்கும்.

முதலில் ஈச்வரனுடைய ஸ்வரூபத்தைப் பற்றிப் பேசுகின்றோம். நம் ஆத்மா போல் இதுவும் சேதாம். ஸ்வயம் பிரகாசம். நித்யம் ஆனால் அணுவன்று. எங் வியாபித்திருக்கின்றது. இது இல்லாத இடமே இல்லை. இக்காரணத்தினால் இது விபு எனப்படுகின் றது. இப்படி ஈச்வரன் எங்கும் வியாபித்திருந்தாலும் கறுப்பு வெளுப்பு என்ற இவ்வித நிறம் ஒன்றுமில்லாதவ னாகையால் அவனை நாம் காணமுடியாது. ஸ்பர்சம் இல்லாதவனாகையால் ஸ்பர்ச இந்த்ரியத்தால் தொட்டு அறியமுடியாது.

பாலுக்குள் நெய் போலவும் அரணிக்கட்டை முதலியவற்றில் நெருப்புப் போலவும் மறைந்திருக்கிறானென்று கொள்ளவேண்டும்.

ஜடப்பொருள், ஜீவாத்மா, இவற்றைக் காட்டிலும் முற்றிலும் வேறுபட்டது பரமாத்ம ஸ்வரூபம், என்பதை நன்றாக அறிவதற்காக இன்னும் அதன் பல குணங்களை நாம் பரிசீலனை செய்யவேண்டும். ஜடப்பொருள் எப் பொழுதும் மாறிக்கொண்டேயிருக்கும். மாறுவது அதன் இயற்கை. இதற்கு நேர் எதிரிடையாகப் பரமாத்ம ஸ்வரூபம் எப்பொழுதும் எவ்வித மாறுதலையும் அடைய யாது. இக்காரணத்தினால் இது 'ஸத்யம்' எனப்படும். ஸ்வயம் ப்ரகாசமாய்த் தன்னைத் தானே அறிகின்ற தாகையால் ஜ்ஞான மெனப்படும். ஜீவாத்மாவின் அறிவு ஒரு சமயம் சுருங்கியும் மற்றொரு சமயம் சுருங் காமலும் இருக்கும். பரமாத்மாவின் அறிவுக்கு ஒரு போதும் சுருக்கமில்லை. அதனாலும் அது ஜ்ஞான மெனப்படும்.

மற்ற வஸ்துக்களுக்கெல்லாம் அளவு உண்டு. 'இன்றைக்கு இருக்கின்றது. நாளைக்கு இல்லை'என்பது. கால அளவு. 'இங்கு இருக்கின்றது, அங்கு இல்லை என்பது தேச அளவு. 'இது மாடு. குதிரையன்று', 'இது குதிரை, மாடன்று' என்பதும் 'இரும்பைக் காட்டி லும் வெள்ளி உயர்ந்தது.ஆனால் தங்கத்தைக் காட்டி லும் உயர்ந்ததன்று' என்பதும் பொருள் அளவு. அளவு என்பது வடமொழியில் பரிச்சேதம் எனப்படும். கீழ்க் காட்டிய மூன்றுவித அளவும், அதாவது மூன்றுவித பரிச் சேதமும், இல்லையாகையால் பரமாத்மஸ்வரூபம் அநந்த, மெனப்படும். அது எக்காலத்திலும் உள்ளதாகையால் 'இக்காலத்தில் இருக்கின்றது, மற்றொரு காலத்தில் இல்லை' என்கிற காலபரிச்சேதமில்லாதது, எங்குமுள்ளதாகையால் 'இங்கு இருக்கின்றது அங்கு இல்லை' என் கிற தேச பரிச்சேதமில்லாதது. உலகத்திலுள்ள எல் லாப் பொருள்களுக்கும் உள்ளே ஆத்மாவாக இருக் இன்றதாகையால் எல்லாப் பொருள்களும் பரமாத்மா வாகவே ஆகின்றன. ஆகையால் மாடும் பரமாத்மா, குதிரையும் பரமாத்மா, மரமும் பரமாத்மா. மனிதனும் பரமாத்மா. இப்படி எல்லாமே பரமாத்மாவாகையால் 'இது பரமாத்மாவன்று' என்கிற பொருள் அளவு. அதா வது வஸ்து பரிச்சேதம், அதற்கு இல்லை, இப்படியே பரமாத்மாவுக்கு மேல்பட்ட உயர்ந்த வஸ்து ஒன்றுமே இல்லையாகையால் 'அது இதைக்காட்டிலும் உயர்ந்தது. ஆனால் மற்றொன்றைக் காட்டிலும் தாழ்ந்தது' என்கிற பொருள் அளவும் அதற்கு இல்லை. இவ்வாறு மூன்றுவித பரிச்சேதமுமில்லையாகையால் அது அநந்தமாகின்றது. அருந்தம் அந்தம் அளவு, பரிச்சேதம்.

பரமாத்ம ஸ்வரூபம் தனக்கும் பிறர்க்கும் அனு பவிக்க அனுபவிக்கத் தெவிட்டாத ஒரே பேரின்பமாக விருக்குமாகையால் அது ஆனந்தமெனப்படும்.

புண்யம், பாவம் மற்றப்படி உலகத்தில் அழுக்கு அல்லது மலமெனப்படுவது எதுவும் அதைச் சாரா தாகையாலும் மற்றவர்களுடைய ஸர்வ மலத்தையும் அது போக்குமாகையாலும் அது அமலமெனப்படும். அமலம் மலமற்றது.

இப்படி ஸத்யத்வம், ஜ்ஞானத்வம், அகந்தத்வம், ஆகந்தத்வம், அமலத்வம் என்கிற இந்த ஐந்து குணங் களையும் நன்றாக அறிந்து புத்தியில் தரிப்பவர்களுக்குப் பரமாத்ம ஸ்வரூபம் மற்றெல்லாவற்றைக் காட்டிலும் வேறாக, ஸ்பஷ்டமாகத் தோன்றும்.

ஜ்ஞானத்தோடு சக்தி, பலம் ஐச்வர்யம், வீர்யம், தேஜஸ்ஸு என்ற ஐந்து குணங்களைச் சேர்த்து ஆறு குணமுள்ளவன் பரமாத்மா என்கிறது சாஸ்திரம். முக் காலத்து ஸர்வ விஷயங்களையும் உள்ளபடி ப்ரத்யக்ஷ மாக காணும் அறிவு ஜ்ஞானம். நினைத்ததை எல்லாம் அப்படியே செய்யக்கூடிய வன்மை அல்லது ஆற்றல் சக்தி. கீழ் மேலுலகங்கள், அவற்றில் அடங்கிய ஸர்வ ஜட அஜடப் பொருள்கள், இவை எல்லாவற்றையும் தாங்குவதற்குரிய ஆற்றல் பலம். இவற்றை எல்லாம் தன் விருப்பப்படி ஆக்குவதற்கும்

நடத்துவதற்கும் உரிய ஆற்றல் ஐச்வர்யம். இவற்றை எல்லாம் ஸொத்தாக உடையவன் அவன். அவனுடைய சொத்து இவை யெல்லாம், என்கிற இத்தன்மையும் இதில அடங்கும்.

பூமி, மலைகள், கடல்கள், திசைகள், ஆகாசம், ஸூரியன், சந்திரன், நக்ஷத்திரங்கள் இவற்றை எல்லாம் இடைவிடாது தாங்கிக்கொண்டிருந்தபோதிலும் தளர் வில்லாமலிருக்கும் ஆற்றல் வீர்யம்.

தன் செயல்களில் பிறர் உதவியை வேண்டாம லிருப்பது, தான் செய்வதைப் பிறர் எவரும் தடுக்க முடியாமலிருப்பது, பிறர் எவராகிலும் தனக்கு அடங்கி யிருக்கும்படி செய்வது, இவையெல்லாம் தேஜஸ்ஸு.

..........அடுத்த இதழில் தொடரும்

| குரோதி சித்திரை மாத திவ்ய பிரபந்தம் (கோதை லக்ஷ்மி ஸ்ரீநிவாஸன் – ஓசூர்) | பதில்கள் |
|---|---|

**விடைகள்:-**

1. 1.வீடும் பொருளும் தருமமும் (40), 2. நீசச் சமயங்கள், வேதம் களிப்பு, (54) 3. யோகம்தொறும், திருவாய்மொழியின், இன்னிசை மன்னும்(60),
2. ஆதி கூறுதும் அநந்தரம் கூறுமின், அண்டம் எந்மின் எந்தை பாடுதும் தீ உடுத்து எந்நாள் கூறுதும் நெய்யும் அல்லும் கூறுவனே.
3. தேவகி மாதா புலம்புவதாக குலசேகராழ்வார் பாடுகிறார். (பெரு திரு 7-3)
4. பெரிய பெரிய மலைகளையும் பாலை நிலங்கள் முதலிய அருவழிகளையும் கடந்து விஸ்தாரமாக வேகமாக வாய்கால்இட்டு ஓடிவரும் காவிரி நதி என்கிறார் (திருச்சந்த - 61)
5. திருப்பிரிதி திவ்ய தேசம் வந்து பூஜைக்குரிய எட்டு மலர்களையும் கொண்டு எம்பெருமானுக்கு அர்ச்சனை செய்து சஹஸ்ரநாமம் கொண்டு வழிபட்டனர் என்கிறார். (பெரி திரு 1-2-6)
6. 10. ( மு திரு - 26,37,38,39,40,68,76,77,81,99)
7. 1. - ஈ, 2. - இ, 3. - அ, 4. - ஆ,
8. பூதத்தாழ்வார் ( இர திரு - 74)
9. தொண்டரடிப் பொடியாழ்வார் ( திருமா - 13)
10. 1.குழாம் - சேனைக்குழாங்கள் மிகுதியாகக் கொண்ட இராவணன், 2.குழாம் - அதிகமான ஸ்ரீவைஷ்ணவர்கள் கூட்டங்கள் உள்ள திருநகரி திருத்தலம், 3.குழாம் - பாசுரங்கள் கூட்டமாக நிறைந்த திருவாய்மொழி 4.குழாம் - பெரிய கோஷ்டியாய் திருவாய்மொழி பாடுபவர்கள் (திருவா 2-3-11).

******************************************************************************

# பிராட்டியின் சக்தி

பிள்ளை லோகாச்சாரியார் என்ன சாதிக்கிறார் தெரியுமா?
பிராட்டியின் சக்தி என்னவென்று தெரியாதவர்கள் தான், ராவண பலாத்காரத்தால் தான், சீதாபிராட்டி கடத்தப்பட்டாள் என நினைப்பார்கள்.
ஆனால், ராட்சதனையும் சரணாகதி அடையச்செய்ய, சீதாபிராட்டி உருவாக்கிக் கொண்ட சந்தர்ப்பமே அது,'' என்கிறார்.
பிராட்டியின் சக்தி அபரிமிதமானது. அவள் தான் ராவணனையும் கட்டி தூக்கிச்சென்றாளே தவிர, அவன் அவளைத் தூக்கிச் செல்லவில்லை.
அவள் ஏன் சிறைப்பட்டாள்?
தான் உள்ளே போனால் தான் மற்றவர்களுடைய சிறையை அறுத்து விட முடியும் என்பதால் தான்! அவள் சிறைப்பட்டால் தான், தேவஸ்திரீகளின் சிறையை வெட்டி விட முடியும்! அது மட்டுமா! சம்சாரிகள் இந்த ராவணனால் படும் துன்பத்தில் இருந்து தீர்த்து விட முடியும். அதற்காகத்தான் சீதை வலியப் போனாள்.
ஒருவன் கிணற்றில் விழுந்து விட்டான். அவனைத் தூக்கிவிட, ஓரளவு ஆழத்துக்கு வேண்டுமானால் கயிறைக் கட்டி தூக்க முயற்சிக்கலாம்.
ஆழம் அதிகமென்றால், உள்ளே குதித்து தான், கிணற்றுக்குள் கிடப்பவனை மீட்டு வர முடியும். சீதாதேவி அதைத் தான் செய்தாள். அவளைப் பற்றினால் தான் பிறகு அவனைப் பற்ற முடியும்.
பெருமானின் குணங்கள் பல. அதை எண்ணி முடிக்க முடியாது.
அவரது குணங்கள் பற்றி நம் நாக்கிற்கு அந்தளவு தான் பேசும் சக்தி இருக்கிறது! நம்மாழ்வார் பெருமானைப் பற்றி 1202 பாடல்கள் பாடினார். அதற்காக அவர் பாடிய அளவுக்கு தான் அவரது குணங்கள் என்றில்லை! அவருக்கு அந்தளவு தான் சக்திஇருக்கிறது.
பெருமாளை ''பராபரன்' என்பார்கள். ''பர' என்றால் ''மேன்மைக்கெல்லாம் எல்லை'. ''அபர' என்றால் ''எளிமைக்கெல்லாம் எல்லை'. அவரது குணங்களை மேன்மை, எளிமை என்று இரண்டு கோஷ்டிகளாகப் பிரிக்கலாம்.
ஆனால், இதில் ''பரத்வம்' எனப்படும் மேன்மை குணம் தான் அவரிடம் அநேகமாக பிரகாசிக்கும்.
எளிமையை அவரது ஸ்வாதந்திரமும் (சுதந்திரம்) கோபமும் அநேகமாக மூடியிருக்கும். இதை ''நெருப்பு கிளர்ந்தாற் போல்' என்பர்.
தணல் ''தக தக' என எரியும். ஆனால், மேலே சாம்பல் மூடியிருக்கும். சாம்பலைத் தட்டினால் தான் தணலின் தகதகப்பு தெரியும்.
அதுபோல, பெருமாளிடம் நிறைய குணங்கள் உண்டு.
பக்தனை ரட்சிக்க அபரிமிதமான குணங்கள் உண்டு. ஆனால், அது சாம்பல் மூடிய தணல் போல காணப்படும்.

தாய்மார்களிடம் கேட்டால் தெரியும். சின்னகோலைவைத்து சாம்பலைத் தட்டினால் தணலின் தகதகப்பைத் தெரிந்து கொள்ளலாம். (இப்போது இது மாதிரி தணல் விஷயங்கள், நம் ஸ்திரீகளுக்கு தெரியுமா தெரியாதா என்று கேட்டு விட வேண்டாம்).

பெரியவர்கள் தங்கள் நாளில் பார்த்ததை வைத்து தான் இதையெல்லாம் சொல்லியிருக்கிறார்கள்.

பிராட்டி அந்த சாம்பலைத் தட்டுகிறாள். உடனே பெருமானின் கல்யாண குணங்கள் பொத்துக்கொண்டு வெளியே கிளம்புகின்றன.

இதுவரையும் நீங்கள் பெருமானைச் சேவித்தீர்கள். பிராட்டியை சேவித்தபிறகு பெருமானிடம் போனால், இன்னும் அதிகமாக அவரது குணம் பிரகாசிக்கும்.

"மாமாயன் மாதவன் வைகுந்தன்' என்று பாடுகிறாள் ஆண்டாள்.

இதில் மாமாயனும் வைகுந்தனும் பெருமாள். நடுவில் இருக்கும் மாதவத்துவமே பிராட்டி.

அதனால் தான், இதை நடுவில் போட்டு எழுதினாள் ஆண்டாள். பிராட்டியின் சம்பந்தம் இருந்தால் தான் அவனே மாமாயன், வைகுந்தனாக முடியும்.

FB Nalini Gopalan



## வேத சம்ரக்ஷணைக்காக, தங்களால் முடிந்ததை கண்டிப்பாக செய்யவும்.

# ஸேவிக்க தகாத சமயங்கள்

1. கோயிலில் பெரியோர்களை ஸேவிக்கக்கூடாது. கை கூப்பினால் போதும்.
2. படுத்துக்கொண்டிருப்பவர்களையும் ஈரத்துணி உடுத்திக் கொண்டிருப்பவர்களையும் ஸேவிக்கக்கூடாது.
3. வருத்தி க்ஷயம் என்ற தீட்டுக் காலங்களில் யாரையும் ஸேவிக்கக் கூடாது.
4. நம்மைக் காட்டிலும் யோக்யதாம்சம் குறைவானவர்களை சிறியவர்களை ஸேவிக்கக்கூடாது.
5. பெருமாளை ஸேவித்தால் அபிவாதனம் செய்யக்கூடாது.
6. யதிகளை ஸேவித்தால் அபிவாதனம் செய்யக்கூடாது.
7. ஸ்திரீகளை ஸேவித்தால் அபிவாதனம் செய்யக்கூடாது.
8. பெரியவர்களின் கோஷ்டியை ஸேவித்தால் அபிவாதனம் செய்யக்கூடாது.

## பிறர் செய்யும் தவறுகளை மறந்தால் மனம் லேசாகும்

**அமெரிக்க ஜனாதிபதியாக இருந்தவர் ஆபிரகாம் லிங்கன். ஒருநான் அவரை சந்திக்க வந்த ஒருவர், ""ஐயா! எனக்கு ஒருவன் தீங்கு செய்துவிட்டான். அதை என்னால் மறக்க முடியவில்லை. தீர்வு சொல்லுங்கள்'" என்று கேட்டார். சிறிது நேரம் யோசித்தவர். " உங்கள் கோபம் தீர, அவரை விமர்சித்து கடிதம் எழுதுங்கள். என்னிடம் கொண்டு வாருங்கள்" என்றார்.**

**அவரும் கடிதத்துடன் வந்தார். "நீங்கள் கூறியபடி எழுதியுள்ளேன். இதை தபாலில் அனுப்பவா" எனக் கேட்டார். "உங்கள் கோபம் குறைந்ததா" என லிங்கன் கேட்டதற்கு, ஆம்! என சொன்னார்.**

**"சரி, கடிதத்தை குப்பைத்தொட்டியில் போடுங்கள். அவரை மன்னியுங்கள். மனச்சுமை குறையும்"  என்றார்.**

**பிறர் செய்யும் தவறுகளை மறந்தால் மனம் லேசாகும். அதுவே மன்னித்தால் மன நிறைவு உண்டாகும். இதை பின்பற்றினால் எப்போதும் அமைதி இருக்கும். ஒருவர் நமக்கு தீமை செய்கிறார் என்றால், பதிலுக்கு நன்மைதான் செய்ய வேண்டும். மனதால் கூட அவருக்கு தீங்கு நினைக்கக் கூடாது. இந்த மனப்பக்குவம் இருந்தால் நமது வாழ்வு வளமாகும்.**

வந்தே குரு பரம்பராம்

பங்கயத் திருமுகத்தோன் செங்கண் மால் எங்கள் நேயன்/
மங்கலப் பங்கயத்தாள் மகிழ்ந்துறை மார்வன்இங்கே/
அங்கரப் பங்கயத்தால் அபயமென்றுரைக்கும் வேளை/
பங்கயமாலை சொக்கி மயங்கியே இவன்தாள் நோக்கும்!//(1)

தோளிணை சேர்ந்தமாலை தாளிணை சேர்ந்தவேளை/
நாளுமிங்கிவனைப் பற்றும் ஞானியர் கண்ட உண்மை/
கோளொடு கூற்றமில்லை கும்பிட்டகைகளோடு/
ஆளரி பதங்கள் பற்றும் அன்பர்தம் வாழ்வில் என்றும்!//(2)

மானுட வாழ்வு தந்து மங்கல ஒலியாய்த் தன்னைக்/
காணும்மெய் ஞானமோடு காட்சியும் தந்தருள்செய்/
வானவர் தவத்தினாலும் காண்பரிதான சோதிப்/
பானகம் விழையும் எந்தை பதமலர் பற்றுவோமே!(3)

ஆமையாய்த் தோன்றி அன்று அமரர்க்கு அமுதம் ஈந்து/
அமுதினுக்கமுதமான அழகினைத்தான் மணந்தான்!/
தேனமர் வண்டுதானும் ரீங்கரிக்கும்:பொழில்சூழ்/
மாநகர் அரங்கத் தெம்மான் கிடந்ததும் எவ்வுளூரே//(4)

-ஹேமா ராகவன் வயநாடு



# பயனற்ற தவம்: யவக்கிரீதன் கதை

பாண்டவர்கள் யாத்திரை போன காலத்தில் ஒரு நாள் ரைப்யருடைய ஆசிரமம் என்று வழங்கும் இடத்துக்குப் போய்ச் சேர்ந்தார்கள்.

''அதோ பார், கங்காதிரம்'' என்றார் லோமசர்.

''இதுதான் தசரத குமாரன் பரதன் ஸ்நானம் செய்த இடம். விருத்திரனை அதர்ம வழியில் கொன்றதனால் இந்திரன் அடைந்த பிரம்மஹத்தி தோஷம் இந்தத் தீர்த்தத்தில் தான் கழுவப்பட்டது. சனத்குமாரர் சித்தி யடைந்த க்ஷேத்திரமும் இதுவே. தேவர்களின் தாயான அதிதி புத்திரப் பேறுபெற இந்த மலையில் தான் பொங்கல் வைத்தாள். யுதிஷ்டிரனே! இந்தப் புண்ணிய மலையில் ஏறி, உங்களுடைய புகழுக்கு வந்த இடையூறுகளை யெல்லாம் போக்கிக் கொள்ளுங்கள். இங்கே ஓடும் கங்கையில் நீராடினால் ஆணவமும் குரோதமும் நீங்கும்'' என்று லோமசர் பாண்டவர்களுக்கு அந்த இடத்தின் மகிமையை எல்லாம் விளக்கிச் சொன்னார்.

''ரிஷி புத்திரனான யவக்கிரீதன் இவ்விடத்தில் தான் நாசமடைந்தான்'' என்று கதையைச் சொல்லுகிறார்.

''பரத்வாஜர், ரைப்யர் என்ற இரண்டு பிராமண சிரேஷ்டர்கள் வனத்தில் ஆசிரமங்கள் அமைத்துக் கொண்டு இருந்தார்கள். இருவரும் மிக நெருங்கிய சிநேகிதர்கள். ரைப்யரும் அவருடைய குமாரர்களான பராவசு, அர்வாவசு, என்கிற இருவர்களும் நன்றாக வேதம் ஓதி, பெரிய வித்வான்களாகப் புகழ் பெற்றார்கள். பரத்வாஜர் தவத்திலேயே தம் நேரத்தை யெல்லாம் கழித்து வந்தார். பரத்வாஜருக்கு ஒரு மகன் இருந்தான். அவன் பெயர் யவக்கிரீதன். பிராமணர்கள் வித்துவானான ரைப்யரை மதிப்பதுபோல் தன்னுடைய பிதாவை மதிக்கவில்லை யென்பதை யவக்கிரீதன் கண்டான். ரைப்யரும் அவர் குமாரர்களும் தங்கள் கல்வியின் பயனாக ஜனங்களிடம் அதிகமான மதிப்பைப் பெற்றிருப்பதைப் பார்த்து யவக்கிரீதன் பொறாமைப் பட்டுத் துயரம் அடைந்தான்.

யவக்கிரீதன் இந்தக் குறையைத் தீர்த்துக்கொள்ள இந்திரனைக் குறித்து, கடுந்தவம் புரிந்தான். நெருப்பில் தன் தேகத்தை வாட்டி, தேவராஜனுக்குச் சந்தாபம் உண்டாக்கினான். மனிதர்கள் தவம் செய்து உடலை வாட்டிக் கொள்ளுவது தேவர்களைத் துன்புறுத்தும். யவக்கிரீதனுடைய கடுந்தவத்தைக் கண்டு தேவராஜன் இரங்கி ''ஏன் இந்தக் கோரமான தவம்?'' என்றான்.

''பிராமணர்கள் இதுவரையில் ஓதியிராத வேதங்கள் எல்லாம் எனக்கு வரவேண்டும். நான் பெரிய வித்வானாகவேண்டும். அதற்காக இந்தத் தவம் செய்கிறேன். குருவின் வாயால் நீண்ட காலம் ஓதிக் கஷ்டப்பட்டு வேதங்களை அடைய வேண்டியதாயிருக்கிறது. அவ்வாறு இல்லாமலே அடைய நான் தவம் செய்கிறேன். எனக்கு அருள்வாயாக'' என்றான் யவக்கிரீதன்.

இந்திரன் நகைத்தான். ''பிராமணனே! நீ வழியில்லாத வழியில் செல்லுகிறாய். திரும்பிப் போய் தகுந்த குருவை நாடிக்

கற்றறிந்து வேதங்களை அடைவாயாக. படிப்புக்கு வழி தவமல்ல. படிப்புக்கு வழி படிப்பேயாகும்'' என்று சொல்லிவிட்டு மறைந்தான்.

பரத்வாஜ புத்திரன் விடவில்லை. இன்னும் மிகக் கோரமான முறையில் தவம்செய்தான். அதனால் தேவர்கள் மிகவும் துன்புறுத்தப்பட்டார்கள். இந்திரன் மறுபடியும் வந்து யவக்கிரீதனைப் பார்த்து, ''நீ சரியாக ஆராய்ந்து விஷயத்தை அறிந்து கொள்ளாமல் இந்தக் காரியத்தில் பிரவேசித்திருக்கிறாய். உன் தகப்பனாருக்கு வேதம் தெரியும். உன்னாலும் ஓத முடியும். போய்க் கற்றுக்கொண்டு வேதங்களை அடைவாயாக. உடலை வாட்டித் தவம் செய்வதை நிறுத்து'' என்றான்.

இவ்வாறு இந்திரன் இரண்டாம் முறை சொன்னதையும் யவக்கிரீதன் கேட்கவில்லை. ''என்னுடைய விருப்பத்தை நீ செய்யாமல் போனால் என்னுடைய சரீர அங்கங்களை ஒவ்வொன்றாக வெட்டி நெருப்பில் போட்டு ஹோமம் செய்யப் போகிறேன். விடுவதில்லை'' என்றான்.

அவ்வாறே கடுந்தவம் செய்தான். தவத்துக்கிடையில் ஒரு நாள் காலை கங்கையில் ஸ்நானம் செய்யப் போனான். அங்கே நோய்ப்பட்டு மெலிந்திருக்கும் ஒரு வயோதிக பிராமணன் கங்கைக் கரையில் உட்கார்ந்து கொண்டு பிடிப்பிடியாக மணலை எடுத்துத் தண்ணீரில் போட்டுக் கொண்டிருந்தான்.

''என்ன செய்கிறாய், கிழவா?'' என்று கேட்டான் யவக்கிரீதன்.

''கங்கையைத் தாண்டச் சேது ஒன்று கட்டுகிறேன். இங்கே நதிக்குக் குறுக்காக ஒரு மணற் சேது கட்டி விட்டால் ஜனங்களுக்குச் சௌகரியமாக இருக்கும். இப்போது கங்கையைத் தாண்டிப் போக ரொம்பக் கஷ்டப்படுகிறார்கள். ஆகையால் இந்தக் காரியத்தில் இருக்கிறேன்'' என்றான் அந்தக் கிழவன்.

யவக்கிரீதன் நகைத்து, ''ஓடும் ஆற்றை இம்மாதிரித் தடுத்துச் சேதுவை உண்டாக்க முடியாது. எழுந்து வேறு காரியம் செய்'' என்றான்.

''தாங்கள் வேதங்களை ஓதாமலே அடையப் பெருந்தவம் செய்கிறீர்கள் அல்லவா? அவ்விதமே நானும் கங்கைக்குச் சேதுவைக் கட்ட முயற்சி செய்கிறேன்'' என்றான் கிழவன்.

ஃ ஃ ஃ

யவக்கிரீதனுக்குக் கிழவன் யார் என்று இப்போது தெரிந்துவிட்டது.

''தேவராஜனே, என்னுடைய முயற்சி வீண் என்று நீ எண்ணுவதாயிருந்தால், எவ்வாறு நான் வித்துவான் ஆவேனோ, அவ்வாறு எனக்கு வரம் தருவாயாக'' என்று மறுபடியும் யவக்கிரீதன் இந்திரனை வருந்தி வேண்டினான்.

''சரி, வரம் தந்தேன். போய் வேதங்கள் அத்தியயனம் செய். நீ வித்துவான் ஆவாய்'' என்று இந்திரன் யவக்கிரீதனை ஆசீர்வதித்துத் திருப்தி செய்தான்.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# உடையவரே உறுதுணை

ஸ்ரீவைஷ்ணவனாகப் பிறந்து, பிறரும் போற்றத்தக்க வகையில் பெருமையை நாம் பெற்றிருப்பதற்குக் காரணம், பெரும்பூதூர் வந்த வள்ளல் ஸர்வ ஜனங்களும் உய்ய கருணைக் கடலாகத் திகழ்ந்த சிறப்பினால்தான். ஸ்வாமி ஸ்ரீதேசிகன் ஸாதித்துள்ளபடி—

"திருமாலடியிணையே திண்சரணாகக் கொண்டு
திருமாலடியிணையே சேர்வார்—ஒருமால்
அருளால் அருளாத வானோர்கள் வாழ்ச்சி
அருளால் நமக்களித்தாராய்ந்து."

—அமிருதரஞ்சனி 39

வானோர்களின் வாழ்ச்சியை நமக்கு அளித்தமையால், நம் பரமாசார்யரான ஸ்ரீ ராமாநுஜர் எம்பெருமானார் என்றே கொண்டாடப்படுகிறார். ஸகல ஆத்ம குணங்களும், ஞான வைராக்யாதி சீலங்களும் உடைய நம் உடையவரே நமக்கெல்லாம் உறுதுணையாகத் திகழ்வார். நாம் அநுதினமும் அவர்தம் பொன்னடியே போற்றி, அந்த ஆசார்ய ஸார்வ பௌமரை வந்தித்து வந்தால், நம்முடைய சங்கடங்கள் குறையும், அஞ்ஞான இருள் விலகும், தீய பழக்க வழக்கங்கள் தொலையும், இந்தத் தேசத்தைப் பீடித்துள்ள துர்ப்பாக்கிய நிலை குலையும். எம்பெருமானாரைப் பிரத்யக்ஷ தைவமாகவே போற்றி, பேரருள் பெற்ற மஹா பாக்யசாலி திருவரங்கத்தமுதனார். அவர் திருவாய் மலர்ந்தருளிய இராமநுச நூற்றந்தாதி 'பிரபந்த காயத்திரி' என்றே போற்றப் பெறும் ஒப்பற்ற பேற்றினைப் பெற்றது. இந்தப் பிரபந்த காயத்திரியை ஒவ்வொரு வைஷ்ணவக் குடும்பமும்—ஆண்-பெண் அடங்லாக—மனப்பாடம் செய்து, தினமும் அநுஸந்தித்து வர வேண்டும். அப்போதுதான் பொருளல்லாத நம்மைப் பொருளாக்கிய எம்பெருமானாரிடம் நாம் சிறிதளவாவது

நன்றியுணர்வு கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்ள முடியும். உத்தியோகம், தொழில், அலைச்சல் என்று அவகாசம் போதாமல் அலையும் லௌகிகர்கள் தினமும் கீழ்க்கண்ட பாசுரங்களையாவது, அல்லது இவைபோல் வேறு சில பாசுரங்களையாவது, மனமுருகி அநுஸந்தித்து வருவார்களானால் நலன்களையே பெறுவார்கள்—இது ஸத்யம்!

### பல்கலையோரும் பல்கி வாழ்வர்!

பூமன்னு மாது பொருந்திய மார்பன், புகழ்மலிந்த
பாமன்னு மாறன் அடிபணிந் துய்ந்தவன், பல்கலையோர்
தாம்மன்ன வந்த இராம னுசன்சர ணாரவிந்தம்
நாம்மன்னி வாழ,நெஞ் சே! சொல்லு வோமவன் நாமங்களே.

—'பிரபந்த காயத்திரி' 1

### நம்மாழ்வார் பேரருள் பெறுவர்!

எய்தற் கரிய மறைகளை, ஆயிரம் இன்தமிழால்,
செய்தற் குலகில் வரும்சட கோபனைச், சிந்தையுள்ளே
பெய்தற் கிசையும் பெரியவர் சீரை உயிர்களெல்லாம்
உய்தற் குதவும், இராமா னுசனெம் உறுதுணையே.

—'பிரபந்த காயத்திரி' 18

### எல்லா நலன்களும் வந்து சேரும்!

பொருந்திய தேசும் பொறையும் திறலும் புகழும், நல்ல
திருந்திய ஞானமும் செல்வமும் சேரும், செறுகலியால்
வருந்திய ஞாலத்தை வன்மையி னால்வந் தெடுத்தளித்த
அருந்தவன், எங்கள் இராமா னுசனை அடைபவர்க்கே.

—'பிரபந்த காயத்திரி' 32


### பஞ்சாயுதங்களும் ஒருசேர அவதரித்த நம் உறுதுணை!


அடையார் கமலத் தலர்மகள் கேள்வன்,கை யாழியென்னும்
படையோடு நாந்தக மும்படர் தண்டும், ஒண் சார்ங்கவில்லும்
புடையார் புரிசங் கமுமிந்தப் பூதலம் காப்பதற் கென்று,
இடையே இராமா னுசமுனி யாயின இந்நிலத்தே.

—'பிரபந்த காயத்திரி' 33

## திருவரங்கத்தமுதனார் திருவடிகளே சரணம்!

## புத்தகம் மதிப்பாய்வுரை






# பரமபதசோபானம்

**நூலாசிரியர் :: ஹேமா ராஜகோபாலன்**
**புத்தகப்பக்கங்கள் : 256**
**புத்தகத்தின் விலை :: ரூ.250**

**புத்தகத்தின் முன்னுரையிலிருந்து ::**

**ஆசார்யோத்தமர் ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகன் அருளிச் செய்த பரமபதஸோபாநம் என்னும் இந்த நூலின் பெருமை மிக உயர்ந்ததாகும். ஜீவர்கள் அனைவருக்கும் வானேறப் போமளவும் வாழ்வு என்பதனை வெளியிடும் இந்நூல் ஸ்வாமி ஸ்ரீதேசி கனுடைய கருணைமிகு திருவுள்ளத்தைக் காட்டவல்லது! ஜீவர்கள் அனைவரும் உய்வடையவேண்டும் என்ற நல்லுள்ளத்துடன் பரமபதமாகிய மோக்ஷத்தை அடைவதற்கு இவர் அமைத்தருளிய ஒன்பது படிகளே பரமபதஸோபாநம் என்னும் இந்நூலாகும். வானேறும் வழிப்படிகளை வகுத்துக்கூறும் நூல்! மணிப்ரவாள நடையில் அமைந்துள்ள இந்நூலைக் கற்று விரித்துணர்ந்து நன்கு அனுபவிப்பது நமக்கு வாய்த்த பேறெனக் கருதி ஸ்வாமி ஸ்ரீதேசி - கனருளிய இப்படைப்பினை எம்பெருமான் மற்றும் ஆசார்யர்களின் திருவருளையே பற்றாசாகக்கொண்டு ஆராய்ந்து அறிவோமாக.**

**ஒரு நூலின் பெருமை அதனை அருளிச்செய்தவரின் பெருமையை அறிந்தால்தான் நன்கு தெரியவரும் என்பது ஆன்றோர் கருத்து. இதிஹாஸங்களில் சிறந்ததெனப் போற்றப்- படும் ஸ்ரீமத் வால்மீகி ராமாயணத்தின் பெருமை உலகறிந்ததே. இதை அருளிச் செய்த ஸ்ரீவால்மீகி மஹர்ஷி ப்ரஹ்மபுத்ரரான ஸ்ரீநாரத மஹர்ஷியின் மூலம் ஸ்ரீராமபிரானின் சரித்திரத்தை சுருக்கமாகக் கேட்டு இம்மஹாகாவ்யத்தைப் படைத்தார். ப்ரஹ்ம தேவனின் அனுக்ரஹத்தைப் பெற்று தபஸ் ஸ்வாத்யாய நிரதம் எனத் தொடங்கி முன் நடந்த அனைத்து நிகழ்வுகளையும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் கண்டறிந்து வெளியிட்டதுடன் வேதத்தின் உண்மைப் பொருளையும் ஸ்ரீ வால்மீகி மஹர்ஷி உலகோருக்கு எடுத்துரைத்தார்.**

**அதுபோல் ஆசார்ய ஸார்வபௌமரான ஸ்வாமி தேசிகனும் வேத, தர்ம சாஸ்த்ரங்களை ஆதாரமாகக் கொண்டு சரணாகதி சாஸ்த்ரத்தை உலகோர் அறியும்படி தெளிவாகவும் எளிமையா- கவும் வெளியிட்டு அதன்மூலம் ஜீவர்களின் முக்திக்கு வழிகாட்டும் நோக்குடன் அருளிச் செய்த ரஹஸ்ய க்ரந்தமே பரமபதஸோபாநம் என்னும் இந்நூலாகும். ஈச்வர ஸம்ஹிதையின் சலோகத்தின்படி விவேகம் என்பதையே முதல் படியாக்கி ஒரு முமுக்ஷு பரம புருஷார்த்தமாகிய தன் இலக்கினை நோக்கி ஏறவேண்டிய அடுத்- தடுத்த படிகளையும் விளக்கி ஒன்பதாவது படியாகிய பரமபதம் என்னும் இலக்கினை அடைவதை ஒரு அழகிய எழுதுசித்திரமாகவே இந்நூலைப் படைத்தருளியுள்ளார் ஸ்வாமி ஸ்ரீநிகமாந்ததேசிகன்!**

ஸம்ப்ரதாயத்தில் ஊற்றமுடையவர் அனைவரும், எளிய நடையில் அமைந்துள்ள, இந் நூலை அவசியம்வாங்கி பயன் பெறவும்.

ப்ரதிகளுக்கு அணுகவேண்டிய முகவரிகள்:
1.DR. ஹேமா ராஜகோபாலன், பெங்களூரு
080 26568527; 9380925117, 9480588439
2. என்.எஸ்.கண்டாமணி, சேவா ஸ்வாமி கட்டளை
9841046264; 044-26180481

**********************************************************************************

***ஒரு ஸமயம் ஸ்ரீகோழியாலம் ஸ்வாமி ஒருவரை உம்மிடத்தில் ஒரு மாம்பழம் கொடுத்தால் என்ன பண்ணுவீர் என்று கேட்டதற்கு அவர் சிறிது நேரம் யோசித்து அலம்பி சாப்பிடுவேன் என்றார்.***

***ஸ்ரீகோழியாலம் ஸ்வாமி பெருமாளுக்குக் கண்டருளப் பண்ணிவிட்டு சாப்பிடுவேன் என்று சொல்லும் என்று ஸாதித்தாயிற்று.***

***பழம் கொடுத்தாலும் சாப்பிடுவதற்கு முன் செய்யவேண்டியவை உள்ளது என்பது நன்கு புலப்படும்.***

திருவாய்.(10ம்பத்து-9ம் திருவாய்மொழி): அர்ச்சிராதி மார்க்கத்தாலே வைகுண்டத்திற்கு போகும் போது முக்தனுக்கு நடக்கும் உபசாரங்களை இந்தத் திருவாய்மொழி விளக்குகிறது.

முக்தன் வைகுண்டத்திற்குப் புறப்படும் போது ஆகாயத்தில் மேகங்கள் மங்களவாத்யத்தை முழங்குகின்றன. முக்தனை வரவேற்பதற்காக பொன்னாலான பூர்ணகும்பங்களை அவை நீரால் நிறப்புகின்றன. ஆழமான ஸமுத்திரங்கள் மேலே கிளம்பி அலைகளாகிய கைகளை மேலே தூக்கிக் கொண்டு கோஷித்து நர்த்தனம் பண்ணுகின்றன. ஏழு தீவுகளில் இருக்கிறவர்களும் நல்ல வஸ்துக்களைக் காணிக்கையாகக் கையில் ஏந்திக்கொண்டு, "இப்படி ஒருவன் வைகுண்டத்திற்குப் போகும்படி நேர்ந்ததே" என்று நினைத்து மகிழ்ச்சியோடு நிற்கிறார்கள்.

தோரணங்களை வரிசைவரிசையாகக் கட்டி தேவர்கள் முக்தனை வணங்குகின்றனர். ஆதிவாஹிகர்களின் உலகத்தில் உள்ளவர்கள் இவனை வணங்குகின்றனர். தியானம் பண்ணிக் கொண்டிருக்கும் ரிஷிகள் இரண்டு பக்கங்களிலும் நின்றுகொண்டு தூபம் ஸமர்ப்பித்து, நல்ல புஷ்பங்களை மழை போல் வர்ஷித்து, மதுரமாகப் பாடுகின்றனர். முக்தன் செல்லும் வழியில் அவன் தங்க இருப்பிடங்களை ஆதிவாஹிகர்கள் அமைக்கிறார்கள். அக்நி-சூரியன்-சந்திரன்-மின்னல் முதலான ஆதிவாஹிகர்கள் "இவ்வழி வரவேண்டும்" என்று வரவேற்கிறார்கள். வருணன் - இந்திரன் - ப்ரஜாபதி என்கிற ஆதிவாஹிகர்கள் "இவன் எம்பெருமானுக்கு அடியவன்" என்று ப்ரீதியுடன் தங்கள் இடங்களையும் ஐச்வர்யங்களையும் ஸமர்ப்பிக்கின்றனர். வேதாத்யயனத்தாலே பரிசுத்தமான வாயையுடைய ஸ்வர்க்கவாஸிகள் தாங்கள் பலனுக்காகச் செய்த யாகங்களால் பெறப்போகும் ஐச்வர்யத்தை ஸமர்ப்பிக்கின்றனர். அப்பொழுது கின்னரர்களும் கருடர்களும் கானம் செய்கின்றனர். நல்ல வாஸனையுள்ள தூபங்களைச் சிலர் ஸமர்ப்பிக்கின்றனர்; சிலர் காஹளங்களையும் சங்கங்களையும் ஊதுகின்றனர். ஆதிவாஹிகர்களின் மனைவிமார்கள் "திருவாழியான் தமர்களே! வைகுந்தத்தை வீடுபோல் ஆளுங்கள்" என்று ஆசீர்வாதம் செய்கின்றனர். ஏழு மருத்துக்களும், எட்டு வஸுக்களும் தங்கள் இருப்பிடத்திலிருந்து ஸ்தோத்திரம் பண்ணியதால் திருப்தி அடையாமல் தங்களுடைய எல்லைகளை விட்டு அவனோடு கூடச்

சென்று துதிக்கின்றனர்; அவர்களுடைய மனைவிமார்களும் இவனுக்கு மங்களா சாஸனம் செய்கின்றார்கள்.

நித்யஸூரிகள் "இவன் கோவிந்தனுக்கே குடிகுடியாக தாஸன்" என்று மகிழ்ந்து, வரிசை வரிசையாக வந்து எதிர் கொண்டு உபசாரம் செய்கின்றனர்; இவன் வரவை எதிர்பார்த்து வைகுந்தத்திலுள்ள கோபுரங்களை த்வஜங்களால் அலங்கரிக்கின்ற னர். வைகுந்த நகரத்தைப் புகுந்தவுடன் நகரத்துத்துவார பாலகர்கள்" வைகுந்தனைச் சேர்ந்தவர்கள் எங்களுக்கு ஸ்வாமி கள்" என்று சொல்லி, "உள்ளே வரவேண்டும்" என்று கூறி இவனை வரவேற்று ஆச்சர்யப்படுகிறார்கள். எம்பெருமானுக்குக் கைங்கர்யம் செய்யும் நித்யஸூரிகளும் "பூமியிலுள்ள இவன் வைகுந்தத்திற்கு வரும்படி நாங்கள் என்ன பாக்யம் செய்தோம்" என்று வியப்படைகின்றனர். நித்யஸூரிகள் தங்கள் திரு மாளிகைகள் வழியாகப் போகும் இவனை ஸிம்ஹாஸநத்தில் உட்காரவைத்து இவனுடைய திருவடிகளை விளக்குகின்றனர். பூர்ண சந்திரனைப் போன்ற முகங்களையுடைய ஸ்ரீ-பூமி-நீளாப் பிராட்டிகள் தங்கள் பரிஜநங்களுடன் வந்து, வெகுகாலம் தேசாந்தரம் போயிருந்து திரும்பிவந்த பிள்ளையைக் கண்ட தாயைப் போல உகந்து, தமக்கு நிதியான ஸ்ரீ சடகோபத்தையும், எம்பெருமானுடைய திருமேனியின் ஸ்பர்சத்தாலே உயர்ந்த தான ஸ்ரீ சூர்ணத்தையும், பூர்ண கும்பங்களையும், தீபங்களையும் ஏத்திக்கொண்டு எதிர்கொள்கின்றனர். மிகவும் விசாலமான திருமாமணி மண்டபத்திற்குப் போய் எம்பெருமானை அடைந்த இவன் "அடியார்கள் குழாங்களுடன் கூடுவது என்றுகொலோ?" என்று தான் ஆசைப்பட்டபடி நித்யஸூரிகளுடன் கூட முடி வில்லாத ஆநந்தத்தை அநுபவிக்கிறான்.

# ஸ்ரீவராஹ சரம ஸ்லோகம்

ஸ்திதே மனஸி ஸூ ஸ் வதே சரீரே சதி யோ நர
தாது சாம்யே ஸ்திதே ஸ்மர்த்தா விஸ்வ ரூபஞ்ச மா மஜம்
ததஸ்தம் ம்ரியமாணம் து காஷ்ட பாஷாண சந்நிபம்
அஹம் ஸ்மராமி மத்பக்தம் நயாமி பரமாம் கதிம் .

இதன் பொருள் : --

நல்ல நிலையில் மனதும் உடலும் இருக்கும் போது (இளமைக்காலத்தில்) என்னை ஒரு கணமேனும் மகாவிச்வாசத்துடன் ஒருவன் நினைப்பானாகில், அவன் வயதாகி உடல் தளர்ந்து மரக்கட்டையைப் போல் ஸ்மரணை இன்றி கிடக்கும்போது என்னை நினைக்கத்தேவை இல்லை. நானே அவனை வந்து கூட்டிச்செல்வேன்.

திருமாலின் மூன்றாவது அவதாரமான ஸ்ரீ வராக மூர்த்தி பூமாதேவிக்கு கூறிய ஸ்லோகம் இது. இந்த வராக சரம ஸ்லோகத்தை எல்லா நாட்களிலும் உங்களுக்கு நேரம் கிடைக்கும்போதெல்லாம் வாய்விட்டு படித்தோ அல்லது மனதிற்குள்ளோ ஜெபிக்கலாம். நாராயணனின் வழிபாட்டிற்குரிய மாத வளர்பிறை ஏகாதசி, சனிக்கிழமைகள் போன்ற தினங்களில் பெருமாள் கோவிலுக்கு சென்று பெருமாளை வழிபட்ட பின்பு அங்கு தியான நிலையில் அமர்ந்து இந்த ஸ்லோகத்தை மனதிற்குள்ளேயே 108 முறை ஜெபிப்பவர்களுக்கு துர்மரணம் ஏற்படாது. மரணம் குறித்த பயங்கள் நீங்கும். தேவையற்ற கவலைகளிலிருந்து மனம் விடுபடும்.

பூமியை கடலுக்குள் சென்று ஒளித்து வைத்த இரண்யாட்சகனிடமிருந்து பூமாதேவியை மீட்க திருமால் வராகமூர்த்தி அவதாரம் எடுத்து, இரண்யாட்சகனை வதம் புரிந்து பூமாதேவியை தனது தோளில் தங்கி கொண்டு திரும்பும் போது தேவியிடம் ஸ்ரீ வராகமூர்த்திகூறிய ஸ்லோகமே சரம ஸ்லோகம் ஆகும்.

# கோவில்களில் இத்தனை மண்டபங்களா?

கோயில் மண்டபம் என்றால் பலருக்கும் அர்த்த மண்டபம், மகா மண்டபம் இவைதான் நினைவுக்கு வரும். ஆனால் பாரம்பரியமும் பழமையும் மிக்க கோயில்களில் எத்தனை மண்டபங்கள் உண்டு தெரியுமா? இதோ ...

| | |
|---|---|
| 1. அர்த்த மண்டபம், | 20. சூர்ண மண்டபம், |
| 2. மகா மண்டபம், | 21. நறுமணக் கலவை மண்டபம், |
| 3. நிருத்த மண்டபம், | 22. நீராழி மண்டபம், |
| 4. பதினாறு கால் மண்டபம், | 23. கந்த மண்டபம், |
| 5. நூற்று (அ) ஆயிரங்கால் மண்டபம், | 24. ஆபரண மண்டபம், |
| 6. ஸ்நபன மண்டபம், | 25. மஞ்சன மண்டபம், |
| 7. கேய மண்டபம், | 26. அலங்கார மண்டபம், |
| 8. வாத்திய மண்டபம், | 27. வசந்த மண்டபம், |
| 9. முக மண்டபம், | 28. உபசாரமண்டபம், |
| 10. சோபான மண்டபம், | 29. முரசு மண்டபம், |
| 11. கோபுரத் துவார சாலா மண்டபம், | 30. தமிழ்வேதப் பயிற்சி மண்டபம், |
| 12. ஆஸ்தான மண்டபம், | 31. தமிழ் ஆகம மண்டபம், |
| 13. யாக மண்டபம், | 32. புராண விரிவுரை மண்டபம், |
| 14. புஷ்ப மண்டபம், | 33. தீட்சை மண்டபம், |
| 15. பூசை மண்டபம், | 34. வீணா மண்டபம், |
| 16. விஜய மண்டபம், | 35. கொடியேற்ற மண்டபம், |
| 17. சுற்று மண்டபம் | 36. தேர் மண்டபம். |
| 18. உத்யான மண்டபம், | |
| 19. வல்லி மண்டபம், | |

இப்படி பல மண்டபங்களைக் கொண்டது நம் கோயில்கள்.

---

சூரியனின் கதிர்கள் எவ்விதம் உலகம் முழுவதும் பரவுகிறதோ அது போன்று நான் எங்கும் வியாபித்து , அனைத்து உயிர்களையும் தாங்குகிறேன், இதனால் நான் வாசுதேவன் எனப்படுகிறேன்

# இன்பத்தில் இறைஞ்சும் மதுரகவி

புதிராக்கம்: க்ருஷ்ணகுமார தாத தாஸன், புண்யபுரி (பூனா)

சித்திரை மாதம் சித்திரை நக்ஷத்திரம் ஸ்ரீமதுரகவியாழ்வாரின் திருவவதாரத் திருநாள். அவரோடு தொடர்புடைய, மற்றும் பாசுர, வார்த்தைகள், இன்னும் வேறு சிலவுமாக, **சுமார் 40 வார்த்தைகள்** கீழே கட்டங்களுக்குள்ளே குறுக்கு நெடுக்குமாய், இடவலம், நேரே, மாறி, மேலிருந்து கீழும் மற்றும் கீழிருந்து மேலுமாக மறைந்துள்ளன. அவற்றைக் கண்டுபிடித்து ஆழ்வாருடைய திருவவதார நன்னாளைப் போற்றுவோம். அவரது திருவடிகளைப் பணிந்தேத்துவோம்.

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அ | ன் | ப | ன் | ம் | டு | டா | ண் | கொ | ள் | ரு | அ |
| க | டி | ய | ணி | ண் | ப | எ | ன் | டி | ன | ன் | பொ |
| உ | ண் | மை | ப | அ | ய | ழு | ல் | சொ | னி | ர் | க |
| ர் | ன் | ணி | ப் | ணி | ன் | மை | த | க் | க | ளு | ரி |
| கூ | ம் | க | நு | ப | ம | யு | கு | மி | மா | கோ | ய |
| ரு | று | ழ் | கா | ண் | ய | ம் | ம் | ற | ழ் | க் | அ |
| கு | ன் | னே | வி | மே | சி | ன் | ன் | ய | மா | ரு | பெ |
| ந | எ | ரு | கே | ன் | ன் | று | எ | பா | ம | தி | ன் |
| று | ம் | கு | க் | ய | னே | ண் | த் | றை | டி | ரு | னா |
| ற் | பி | பி | வு | வே | தி | ய | ர் | தா | பா | த் | ளி |
| வி | ரா | த | நா | சை | ய் | ஆ | யி | ர | ம் | தி | ரு |
| ந | ன் | னே | தி | ய் | எ | ம் | ப | ன் | இ | பு | அ |

ஸ்ரீமதுரகவியாழ்வார் திருவடிகளே சரணம்


# இன்பத்தில் இறைஞ்சும் மதுரகவி

புதிராக்கம்: க்ருஷ்ணகுமார தாத தாஸன், புண்யபுரி (பூனா)

**விடைகள்:**

**1.கண்ணிநுண் சிறுத்தாம்பு 2.அடிமைப்பயன்3. பொன்னடி 4. பண்ணிய 5. பெருமாயன் 6.அருள் கொண்டாடும் 6. அன்பன் 7.அருளினான் 8. ஆயிரம்9.திருக்கோளூர்10.குருகூர் 11.நம்பி 12.எண்திசை 13.நவிற்று14.திருத்தி 15.காண் 16.எழுமையும் 17. எம்பிரான் 18.மேவினேன் 19.அன்னிக்கும் 20. அருமறை 21. தமிழ் 22.பண் 23. உன் 24.வேயன்25.அணி 26. சொல் 27.உண்மை 28.வேதியர் 29. தக்க 30.நாவுக்கே 31. இன்பம் எய்தினேன் 32. பணி 33. மாறன் 34. பாடி 35.பண் 36. உன் 37. என் 38. என்றும் 39. மதி 40. திரு 41. மணி 42. கனி 43. பாதி 44. கரிய 45.கடி 46. குரு**

சுபம்








HH Srimath Andavan Sri Varaha Mahadesikan wishes to establish a Goshala for accommodating 250 Cows at Amoor Village; has blessed and entrusted the execution to "Sri Ranganatha Paduka Vidyalaya Trust"


## Goshala @ Srirangam and New Goshala in Amur

- Srirangam Goshala – 195 Cows.
- Goshala @ Amur shall be spread over 1.50 Acres (Approx.) with further expansion potential.
- To House up to 240 to 250 Cows Initially.
- Spacious Gracing Area Available within Compound
- Bathing, Watering & Feeding Infrastructure
- Urine and Dung Collection for Fertilizer Production and Supply
- Dairy only from the point of view of Cow Welfare and not for Commercial Activities



WORK COMPLETED :


| | |
|---|---|
| LAYING READYMATE COMPOUND WALL ALROUND | - 990X6=5940Sq.ft |
| SHED AREA | - 15460 Sq.ft |
| INNER FENCE | - 683'X2'9" =1878Sq.ft |
| WELL | - 15'X3'3" |
| BORE WELL | - 8"Ø X 200' deep |
| E.B SHED | - 10'X10' =100 Sq.ft |
| E.B 3PHASE CONNECTION | - 5 KW |
| COMPOUND MAIN GATE | - 18'X6' = 1 NOS |
| COMPOUND SIDE GATE | - 8'X6' = 1 NOS |
| COMPOUND SIDE GATE | - 8'X6' = 1 NOS |
| TOTAL AREA CLEARING WORK | - 62000Sq.ft "(app.) |
| TOTAL AREA LEVELING WORK | - 62000Sq.ft "(app.) |
| QUARTERS | - 26'9"X15' =401 Sq.ft |
| TOILET | -4'3"X5'6" =25 Sq.ft |
| SEPTIC TANK | - 3'X8' |



## Goshala Section Drawing Bin Placements and Financials



C/S OF SEWAGE AND FEED BIN




- Total Development Budget – INR 2.30 Crores
- Spent till date – INR 65.00 Lakhs
- Cost to Complete – INR 1.65 Crores
- Donation Options:
- Shed Donors – INR 25.00 Lakhs (One Cow Shed would be named after the Donor's family suitably)
- Facility Donors – INR 10.00 Lakhs (Such Facility within the Goshala would get named after the Donor's family (Ex: Medical Examination Room, Feed Storage Area, Etc.,)
- Machinery / Amenities Donors: INR 5.00 Lakhs (Suitably Named after the Donor's family)
- Feed Bin Donors: INR 2.00 Lakhs (Single Feed Bin would be named after the Donor's family)
- Water Bin Donors: Rs. 1.00 Lakh (Single Water Bin would be named after the Donor's family)
- General Donors: Rs. 25,000/- and above (Donor's name would be inscribed in a plaque and placed at entry point of Goshala)
- Bank Account Details: Karur Vysya Bank Account No: 1276135000000599 KVBL0001276
- Kindly Donate Generously according to your wish and convenience.
- 80G Exemption and CSR Registration Available.

*************************************************************

**❖All donations to Sri Ranganatha Paduka Vidyalaya Trust are exempt under Sec 80G under the IT Act**

❖

**❖ Corporates can donate and avail under the CSR scheme**

❖

**❖ SRPVT manages Veda patashalas, Goshalas and the Andavan Arts & science college, Thiruvanaikaval**

❖

**❖ Visit to the college, Patashala and Goshala can be arranged for the Donors.**

❖

SRIMAD ANDAVAN ARTS & SCIENCE COLLEGE, SRIRANGAM

विद्यया विन्दते अमृतम्

பயின்று பாதுகை பணிவோம்

***Secretary : : CA R.Venkatesh***

வேத பாடசாலை மற்றும் கோசாலாவிற்கு வழங்கப்படும் அனைத்து நன்கொடைகளும் பிரிவு *80G* இன் கீழ் *IT* விலக்கு பெற தகுதியுடையவை

தங்கள் கருத்துக்களை அனுப்ப வேண்டிய மின் தபால் :

aacharyavriksham@gmail.com vijiranga@gmail.com